**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,**

**"உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது**

**எழுவாரை எல்லாம் பொறுத்து"**

**– (திருக்குறள் 1032)**

உழவுத் தொழில் தவிர பிற தொழில்களைச் செய்வோர் எல்லோரையும் உழவர்களே தாங்குகின்றனர்; அதனால் அவர்களே இந்த உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்கள் என்று வள்ளுவப் பெருந்தகை வலியுறுத்துவதிலிருந்து உழவின் உன்னதத்தை நாம் அறிய முடிகிறது.

**"உலகெலாம் ஒளி விளங்கும் உழவர் உழும் உழவாலே"** என்று கவிச்சக்கரவர்த்தி கம்பரும், **"உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்"** எனவும் **"என்றும் உழவே இனிது"** எனவும் பெருமைமிகு பெண் புலவர் ஔவையாரும் உழவுத் தொழிலின் சிறப்பினை உயர்த்திக் கூறியுள்ளனர்.

தமிழ்நாட்டினைத் தரணி போற்றச் செய்து, வெற்றித் தமிழ்நாடாய் மிளிரச் செய்ய வேண்டும் என்பதையே மனமெங்கும் கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த வெற்றிப்பாதையில் உள்ள முட்களையெல்லாம் மலர்களாக்கி, கற்களையெல்லாம் கனிகளாக்கித் தமிழ்நாட்டை முன்னே அழைத்துச் செல்லும் விவசாயிகளுக்கும் என் பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான தஞ்சையில் பிறந்து, காவிரியின் மடியில் தவழ்ந்து, வயலோடும் வாய்க்காலோடும் விளையாடி, பசி என்றால் அன்னை பரிமாறியதை உண்டு வாழ்ந்த என்னை, அந்த உணவை அளித்த விவசாயிகளுக்கு உறுதுணையாக இருக்குமாறு பணித்து, வேளாண்மை–உழவர் நலத்துறையின் அமைச்சராகப் பெரும் பொறுப்பில் அமர்த்திய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கி **வெற்றி விவசாயிகளைக் கொண்ட வெற்றித் தமிழ்நாட்டினை உருவாக்கும் முதல் முயற்சியாக என்னுடைய முதல் வேளாண்மை நிதிநிலை அறிக்கையினை** இம்மாமன்றத்தின்முன் அளிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

## தமிழ்நாட்டில் வேளாண்மையின் பரிணாம வளர்ச்சி

தமிழ்நாட்டில் சங்க காலத்தில், காடு கொன்று நாடாக்கி, குளம் தொட்டு வளம் பெருக்கி வாழ்வாதாரத்திற்காக மட்டுமே வேளாண்மை செய்த நிலை இருந்தது. இந்தியா சுதந்திரம் பெற்றபின் 1950களில் பாசன வசதிகள் விரிவாக்கம், நிலச் சீர்திருத்தங்கள், சமூக மேம்பாட்டுத் திட்டங்கள், வேளாண் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகள் மூலம் நவீன வேளாண்மைக்கு வலுவான அடித்தளம் அமைக்கப்பட்டது. 1960 முதல் 1980 வரையிலான 'பசுமைப் புரட்சிக்' காலத்தில் உயர் விளைச்சல் இரகங்கள், உரங்கள், பூச்சிக்கொல்லிகளின் பயன்பாடு, பாசன விரிவாக்கம், வேளாண் கடன், அரசின் கொள்முதல் கொள்கைகள் ஆகியவற்றால் உணவுப் பாதுகாப்பை நோக்கிய மாற்றம் நிகழ்ந்தது.

1980களில் இயந்திரமயமாக்கல், பணப்பயிர் சாகுபடி முதலிவற்றை நோக்கி வேளாண்மை பயணித்தது. 2000களில், துல்லியப் பண்ணையம், நுண்ணீர்ப் பாசனம், பாதுகாக்கப்பட்ட சாகுபடி, மதிப்புக் கூட்டல், வேளாண் சந்தைச் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, திறன்சார், சந்தைசார் வேளாண்மை உருவெடுத்தது. 2010களில் காலநிலை மாற்றச் சவால்களை எதிர்கொள்ளும் வகையில், ஒருங்கிணைந்த பண்ணையம், இயற்கை வளப் பாதுகாப்பு, நீர் பயன்பாட்டுத் திறன், மண் வள மேலாண்மை, சூரிய சக்தி பம்புகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPOs), ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி வேளாண்மை மறுவடிவம் பெற்றது.

2021க்குப் பிறகு, செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான ஆலோசனைகள், தரவு சார்ந்த நிர்வாகம், உழவர் செயலி ஆகியவை வேளாண்மையைப் புதிய பரிமாணத்திற்குக் கொண்டு சென்றுள்ளன. சுருக்கமாக, வாழ்வாதார வேளாண்மையிலிருந்து அறிவியல் சார்ந்த வேளாண்மையாகவும், உணவுப் பாதுகாப்பிலிருந்து விவசாயியின் வளமை சார்ந்த வேளாண்மையாகவும், பாரம்பரிய முறைகளிலிருந்து தொழில்நுட்பம், தரவு மற்றும் புதுமைகளை அடிப்படையாகக் கொண்ட நிலையான வேளாண்மையாகவும் உருவெடுத்துள்ளது.

இத்தனைப் பரிணாமங்களும், தமிழ்நாட்டு விவசாயிகள், முன்னேற்றத்திற்கான மாற்றங்களை எந்த அளவு விருப்பத்துடன் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதைக்

காட்டுகின்றன. தமிழ்நாடே மாற்றத்தினை விரும்பியது என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றுதான்.

விவசாயிகளின் முக்கியத்துவத்தைக் கருதி, வேளாண் பணிகளில் பலதுறைகள் பங்கெடுத்துள்ளதால் வேளாண்மைக்கான தனி நிதிநிலை அறிக்கை என்ற நடைமுறையினைத் தொடர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

தொழில்கள் அனைத்திலும் அதிக சவால்களைச் சந்திப்பது வேளாண் தொழிலாகத்தான் இருக்கிறது. இயற்கை அன்னையின் திருவிளையாடல்கள் சில நேரங்களில் எல்லை மீறுதல், தொழிலாளர் பற்றாக்குறை, குன்றும் மண் வளம் மற்றும் நீர்வளம், அதிக உற்பத்திச் செலவு ஆகிய சவால்களை விவசாயிகள் எதிர்கொண்டு, உலகெங்கும் நலங்கொள்ள, பசியென்ற பிணி தீர்க்கப் பழுதின்றிப் பயிர்த் தொழில் பார்த்தாலும், விளைபொருளுக்குரிய விலை கிடைக்காமல் போகும்போது வேளாண்மையினைக் கைவிட்டுவிடலாம் என்று கூட நினைக்கும் நிலை எழுகிறது.

எனவேதான், வேளாண்மையையும் உழவர் நலனையும் ஒருசேரக் காப்பதில் உறுதி கொண்டுள்ளது இந்த அரசு. அதனைச் சொற்களாக மட்டும் சொல்லாமல், செயலாக உணர்த்தவே, **"விவசாயிகள் வெற்றி பெற்றாலன்றி வெற்றித் தமிழகத்தை நாம் காண முடியாது"** என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கேற்ப, சேலம், தஞ்சாவூர், வேலூர், திருநெல்வேலி, சென்னை ஆகிய

இடங்களில் நானும், அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும், துறை சார்ந்த அலுவலர்களும் சென்று, சுற்றுவட்டாரத்தில் இருக்கிற மாவட்டங்களின் உழவர்கள், உழவர் சங்கப் பிரதிநிதிகள், வேளாண் வணிகர்கள், தொழில்முனைவோர், ஏற்றுமதியாளர்கள் முதலியோரை அழைத்துப் பேசி, அவர்கள் கருத்துகள், கோரிக்கைகளுக்கு இடமளிக்கும் வகையில் இந்த வேளாண் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் குறிப்பிட விரும்புகிறேன்

**"ஓர் அரசு வல்லரசு ஆவதற்கு முன் விவசாயிகளுக்கான அரசாக மாறவேண்டும்" என்ற நமது முதலமைச்சர் அவர்களின் கொள்கையினை அடித்தளமாகக் கொண்டு,** விவசாயிகளின் தேவைகளை இயன்ற அளவு நிறைவு செய்திடும் வகையிலும், வேளாண் அறிவியல் சார்ந்த வளர்ச்சிக்கேற்பவும், குறிப்பாக விளைபொருளுக்கு உரிய விலை பெற்று விவசாயிகள் வாழ்வில் வளம்பெறும் வகையிலும் பல முன்னோடித் திட்டங்களுடன் 2026–27 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

வேளாண் பெருமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் ஐந்து ஆண்டுகளில் துறையால் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வகுத்துக் கொடுத்த பல சீரிய தொலைநோக்குத் திட்டங்களின் அடிப்படையில், உழவர் நலம், வருமான உயர்வு, நீர் வளங்களைப் பெருக்குதல் மற்றும் பாதுகாத்தல்,

விளைபொருட்களைப் பாதுகாத்தல், மதிப்புக்கூட்டுதல், வேளாண் ஆராய்ச்சி, உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை வலுப்படுத்துதல், பாசன மேலாண்மை, இயற்கை வேளாண்மை, வேளாண் வணிகம் போன்ற செயல்பாடுகளுக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

இதற்கென, ஏற்கனவே செயல்பாட்டிலிருந்து விவசாயிகளுக்குப் பலனளித்துக்கொண்டிருக்கும் திட்டங்கள் தொடரப்படுவதோடு, பல புதிய திட்டங்களும் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

**"வேளாண்மை பாதிக்கப்பட்டால், வேறு எந்தத் துறையும் சரியான பாதையில் செல்ல முடியாது."**

"If agriculture goes wrong, nothing else will have a chance to go right."

என்று வேளாண் விஞ்ஞானி டாக்டர். எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் வலியுறுத்தியதன் அடிப்படையில் வேளாண்மை நிதிநிலை அறிக்கை தயாரிப்பதற்கு முன்பே விவசாயிகளுக்கும் வேளாண் உற்பத்தி உயர்வுக்குமான பணிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதல்களின்படித் துறையால் தொடங்கப்பட்டுவிட்டன.

**"கடைசி விவசாயியும் வளர்ச்சியடைய வேண்டுமென்றால் பாசன நீரினைக் கடைமடைக்கும் கொண்டு சேர்க்கவேண்டும்"** என்ற நோக்கில் டெல்டா மாவட்டங்களில் இந்த ஆண்டு 2,509 கிலோ மீட்டர் நீளமுள்ள 'சி' மற்றும் 'டி' பிரிவு

வாய்க்கால்கள் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தூர்வாரப்பட்டுள்ளன.

மேட்டூர் அணையில் குறைந்த நீர் இருப்பின் காரணமாக எப்போதும் பாசன நீர் திறக்கப்படும் நாளான ஜூன் 12 ஆம் தேதியன்று மேட்டூர் அணை திறக்கப்படாத நிலையில், **"வானம் பொய்த்தாலும் விவசாயிகள் நலனில் அக்கறை கொண்ட நம் அரசு பொய்க்காது"** என்பதை மெய்ப்பிக்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களுக்கு 134 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பிலான **"குறுவை தொகுப்புத் திட்டம்"** வழங்கினார், அதோடு, இத்திட்டம் முறையாகச் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்திட, தொடர்ச்சியாக ஆய்வுக்கூட்டங்கள் நடத்திக் கண்காணித்து வருகிறார். இதனால், இதுவரை 8 இலட்சத்து 26 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**"வேளாண்மை நடைபெறும் நிலம் 100 சதவீதம் பயிர்க் காப்பீட்டில் கொண்டுவரப்படும்"** என்ற அரசின் தொலைநோக்குத் திட்டத்தின்படி, 2026-2027 ஆம் ஆண்டில், **பிரதம மந்திரி பயிர்காப்பீட்டுத் திட்டத்தை** 37 மாவட்டங்களை உள்ளடக்கிய 14 தொகுப்புகளில் குறுவை, சம்பா மற்றும் குளிர்காலப் பருவங்களில் அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களில் செயல்படுத்த, 648 கோடியே 55 இலட்சம் ரூபாய் மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் 15 இலட்சம் விவசாயிகள் பயனடைவதுடன், **36 இலட்சம் ஏக்கர் சாகுபடிப் பரப்பு காப்பீடு செய்யப்படும்.** மேலும், விருப்பத்தின்

பேரில் பதிவு செய்யும் அனைத்து விவசாயிகளையும் இத்திட்டத்தில் இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்குத் தேவையான கூடுதல் நிதி ஒதுக்கீடும் செய்யப்படும்.

**"விவசாயிகளை வாழவைப்பது மழை தரும் வானம்தான் என்றாலும், சில நேரங்களில் அவர்களை வருத்துவதும் வானமாகத்தான் உள்ளது."**

இந்த ஆண்டு ஏற்பட்டுள்ள 'சூப்பர் எல் நினோ' நிகழ்வினால் நாடு முழுவதும், குறிப்பாக, குறுவைப் பருவத்தில் பெரும் தாக்கம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில், தமிழ்நாட்டில் 12 மாவட்டங்களில் அதிக தாக்கம் ஏற்படும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் அனைத்து மாவட்டங்களுக்கும் தயாரிக்கப்பட்டுள்ள 'மாவட்ட வேளாண்மை இடை ஏற்பாட்டுத் திட்டம்' (District Agricultural Contingency Plan) மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பப்பட்டு அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்த அனைத்து ஏற்பாடுகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மாம்பழத்திற்கு, குறிப்பாக பெங்களூரா இரக மாம்பழத்திற்குக் கடந்த ஆண்டு போலவே இந்த ஆண்டும் போதிய விலை கிடைக்காமல் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலை இருந்தது. எனவே, பெங்களூரா இரக மாம்பழத்திற்கு ஒன்றிய அரசின் சந்தை இடையீட்டுத் திட்டத்தில், விலை வித்தியாசத் தொகை வழங்க ஒன்றிய

அரசுக்கு உரிய கருத்துருவினை அனுப்பி முதல் முறையாக ஒப்புதல் பெறப்பட்டது. இதற்கான நெறிமுறைகள் வகுக்கப்பட்டு திட்டம் தொடங்கப்படுவதற்குள் பெங்களூரா இரகத்தின் அறுவடை முடிவுற்ற நிலையில் 6 மெட்ரிக் டன் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டிருந்தாலும், திட்ட நடைமுறைகள் தெளிவாக வகுக்கப்பட்டிருப்பதால் இனி வருங்காலங்களில் இத்தகைய நிகழ்வுகளை விரைவாக எதிர்கொள்ள, வேளாண்மை–உழவர் நலத் துறை முற்றிலும் தயாராக உள்ளது.

மக்களுக்கான உணவுப் பாதுகாப்பை உறுதி செய்திடும் வகையில், ஐந்து ஆண்டுகளில் 131 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி அடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், 2026–27 ஆம் ஆண்டிற்கு 125 இலட்சம் மெட்ரிக் டன்னாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, ஊட்டச்சத்து வழங்கும் பயறுவகைகள், காய்கறிகள், பழங்களிலும் உற்பத்தியினை அதிகரித்துத் தன்னிறைவை எட்டி, ஊட்டச்சத்துப் பாதுகாப்பினை அடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சீரிய திட்டங்களைச் செயல்படுத்தி, இந்த இலக்குகளை எட்ட அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

நீர்ப்பாசனப் பரப்பை அதிகரிப்பதை, இந்த அரசு தொலைநோக்குத் திட்டமாகக் கொண்டுள்ளதால், பண்ணைக் குட்டைகள், ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள் போன்ற பாசன ஆதாரங்களை ஏற்படுத்தித் தருவதன் வாயிலாக மானாவாரியாக உள்ள சுமார் 2,600 ஏக்கர் பரப்பு பாசனம் பெறும். இது தவிர நுண்ணீர்ப்பாசன அமைப்புகளால் பாசனநீர்ப்

பயன்பாட்டுத்திறனை அதிகரிப்பதன் வாயிலாக சுமார் 50,000 ஏக்கர் கூடுதலாகப் பாசனம் பெறும்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அடுத்த பிறவியில் தாம் விவசாயக் குடும்பத்தில் பிறக்க வேண்டும் என்றார். ஆனால் இப்போதே அவர் எல்லா விவசாயக் குடும்பங்களுக்கும் மகனாகத்தான் இருக்கிறார். அதனால்தான், பயிர் சாகுபடியைத் தொடர்ந்து மேற்கொள்ள உழவர்களுக்கு வழங்கப்படும் இலவச மும்முனை மின்சார சேவையானது, இவ்வரசால் எவ்விதத் தடையுமின்றி தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி, 2026–2027 ஆம் ஆண்டில் இலவச மின் இணைப்புகளுக்கான கட்டணத் தொகையாக தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்திற்கு 7,432 கோடியே 58 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

இயற்கைச் சீற்றங்களால் நிகழும் பாதிப்புகளினால் ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடு செய்ய, பயிர்க்காப்பீட்டு இழப்பீட்டுத் தொகையும், இயற்கைப் பேரிடர்க் காலங்களில், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குப் பயிர்ச் சேதங்களுக்குரிய நிவாரணமும் வழங்கி, அவர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் நடவடிக்கைகள் இந்த அரசால் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

இவை எல்லாவற்றுக்கும் மேல், 'நேர்மைக்கும் நெருப்புக்கும் உருவான தமிழரான' நமது முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, செயல்படுத்தும் அனைத்துத்

திட்டங்களையும், அவற்றின் முழுப் பலன்களும் விவசாயிகளைச் சென்று சேரும் வகையில், வெளிப்படைத்தன்மையுடனும், பொறுப்புணர்ச்சியுடனும், பாரபட்சமின்றியும் செயலப்படுத்துவதில் முழுக் கவனம் செலுத்தி அனைவரும் விரும்பத்தக்க ஒரு மாற்றம் ஏற்படுத்தப்படும்.

**வேளாண்மைத் துறை**

*"முந்தித்தரிசடித்து, முச்சாரியாய் மறித்து*
*நைந்திடவே சேறுகலக்கி, நயமாக நாலுழவு*
*பிந்துஉழுது, கட்டிபேர்த்து, மிதித்து அழுத்திப்*
*பந்தியாக வரப்புப்படுத்தி, கொத்தித் திருத்தி*
*திரைகொண்டு அங்கு தண்ணீர்தேங்க வடித்துவிட*
*நிறைநிறையாய் மடைகள் நீக்கிப் பரம்படித்து*
*குறைவில்லாமல் குண்டினில் கொளுஞ்சிபோட்டு மிதித்து*
*விரைநெல்லின் கோட்டை எடுத்து வந்து"* விதைத்து
நாற்று விட்ட செய்தியை செங்கோட்டுப்பள்ளு சிறப்பாக விவரிக்கிறது.

நாற்று விடுவதற்கே இத்தனைப் பணிகள்; முழுமையாக ஒரு பயிரை விளைவித்து மகசூல் எடுத்து அதனை விற்பனை செய்து வருமானம் காண எத்தனை எத்தனைப் பணிகள்; புதிய தொழில்நுட்பங்கள், ஆலோசனைகள், தரமான இடுபொருட்கள் முதலியவற்றைக் காலத்தே கிடைக்கச் செய்யவும், விவசாயிகளோடு தோளோடு தோள் கொடுத்து உற்பத்தியினைப்

பெருக்கவும் வேளாண்மைத் துறை பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

### 1. தமிழ்நாடு மண்வளப் பாதுகாப்பு இயக்கம்

வேளாண்மைக்கு ஆதாரமாக விளங்கும் மண்ணின் வளத்தைக் காப்பது நீடித்த மற்றும் நிலையான உணவு உற்பத்திக்கும், வளம் குன்றா வேளாண்மைக்கும் இன்றியமையாதது.

மண்புழுக்கள்தான் உழவர்களின் நண்பர்கள் என்பார்கள். மண்புழுக்கள் தங்களுடைய வளைகளால் மழைநீரை மண்ணுக்குள் கொண்டு சேர்க்கின்றன. ஆகவே மண்புழுக்கள் வாழுமளவிற்கு மண் வளத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது.

தமிழ்நாட்டில் செம்மண், பழுப்பு நிற மண், கரிசல் மண், சாம்பல் நிற மண், வண்டல் மண் எனப் பல்வேறு மண் வகைகள் உள்ளன. **ஒவ்வொரு மண்ணுக்கும் ஏற்ற பயிர்கள் உள்ளவாறே ஒவ்வொரு பயிருக்கும் ஏற்ற மண் வகையும் உண்டு.**

இரசாயன உரங்களை மட்டுமே தொடர்ந்து பயன்படுத்துவது, பயிர்க் கழிவுகள் மண்ணில் மட்காமல் இருப்பது, பண்ணைக் கழிவுகளை (farm biomass) முறையாக மறுசுழற்சி செய்யாதது போன்றவற்றால் மண்ணில் உள்ள உயிர்ம கரிம அளவு (Soil Organic Carbon Content) குறைவதுடன் மண் நலமும் வேளாண் உற்பத்தித்திறனும் பாதிக்கப்படுகின்றன. எனவே, மண்ணில் நுண்ணுயிரிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், களர், உவர் நிலங்களை சீர்திருத்துதல், இரசாயன

உரங்களின் பயன்பாட்டைக் குறைத்தல், இயற்கை, உயிர்ம வேளாண் முறைகளை ஊக்குவித்தல் ஆகிய செயல்பாடுகளை மேற்கொண்டு வளமான தமிழ் மண்ணை வருங்காலம் காணுமாறு **"தமிழ்நாடு மண்வளப் பாதுகாப்பு இயக்கம்" 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஐந்தாண்டுத் திட்டமாக இந்த ஆண்டு** அறிமுகப்படுத்தப்படுகிறது.

i. மண்வளத்தை அறிந்து அதற்கேற்ப சமச்சீர் உரப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் விதமாக ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு 4 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீட்டில் மண் நல அட்டைகள் வழங்கப்படும். கூடுதலாக, உழவர் அடையாள எண் பெற்ற சுமார் 3 இலட்சம் விவசாயிகளுக்கு "மண் நல அட்டைகள்" ஒன்றிய, மாநில அரசுத் திட்டத்தின் கீழ் 6 கோடியே 16 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்படும்.

ii. மண் வளத்தை மீட்டெடுக்கும் வகையில் ஒரு இலட்சம் ஏக்கர் பரப்பிற்குத் தேவையான தக்கைப்பூண்டு, சணப்பு, கொளிஞ்சி போன்ற பசுந்தாள் உர விதைகள், 22 ஆயிரம் ஏக்கருக்குத் தேவையான பல்வகைத் தானிய விதைகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகிக்கப்படுவதுடன், வளர்ந்த பசுந்தழைகளை நிலத்திலேயே மடக்கி உழுது மட்கச் செய்திட ஏக்கருக்கு 3,000 ரூபாய் உழவு மானியமும் வழங்கப்படும். இதற்கென 63 கோடியே 50 இலட்சம் ரூபாய் மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

iii. மண் வளத்தைப் பாதுகாக்கும் நுண்ணுயிரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைக்கவும் ஒரு இலட்சம் ஏக்கருக்குத் தேவையான திரவ உயிர் உரங்கள் 4 கோடியே 50 இலட்சம் ரூபாயிலும், உரப் பயன்பாட்டுத்திறனை மேம்படுத்தும் வகையில் நீரில் கரையக்கூடிய உரங்களும், மகசூலை அதிகரிக்க, பருத்திக்கு "காட்டன் பிளஸ்", கரும்பிற்கு "சுகர்கேன் பூஸ்டர்" மற்றும் நெற்பயிரில் பூக்கும் தன்மையை மேம்படுத்தும் "ரைஸ் ப்ளூம்" ஆகிய பயிர் ஊக்கிகளும் 12 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் விநியோகிக்கப்படும்.

iv. மாநிலம் முழுவதும் உயிர்ம வேளாண்மையினைப் பரவலாக்கம் செய்யும் நோக்கில், 2026-27 ஆம் ஆண்டில், மாநில அரசின் சிறப்புத் திட்டமாக, 20,000 ஏக்கரில் உயிர்ம வேளாண் முறைகளைப் பின்பற்றும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 4 ஆயிரம் ரூபாய் சிறப்பு ஊக்கத்தொகை வழங்க 8 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். **இது தவிர, பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில்,** உயிர்ம வேளாண்மையில் ஈடுபடும் உழவர்களை ஒருங்கிணைத்து, 7,500 ஏக்கரை உள்ளடக்கிய உயிர்ம வேளாண்மைத் தொகுப்புகள் உருவாக்கவும், இயற்கை வேளாண்மை வாயிலாக மண் வளத்தை மேம்படுத்தி, நஞ்சில்லா உணவு உற்பத்தி செய்திட,

**இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தில் (National Mission on Natural Farming)** 3,125 ஏக்கரில் புதிய இயற்கை வேளாண்மைத் தொகுப்புகள் உருவாக்கவும் 7,500 ஏக்கரில் இயற்கை வேளாண்மை மேற்கொண்டுவரும் விவசாயிகள் இரண்டாம் ஆண்டு செயல்பாடுகளைத் தொடரவும் 2026–27 ஆம் ஆண்டில் **9 கோடியே 12 இலட்சம் ரூபாய்** ஒன்றிய, மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

v. உயிர்ம வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் நிரந்தர மண்புழு உரக்கூடங்கள் அமைத்திட 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

vi. தேசிய உயிர்ம உற்பத்தித் திட்டத்தில் (NPOP) புதிதாகப் பதிவு செய்யும் விவசாயிகளுக்கான பதிவுக் கட்டணமும் மாறுதல் காலத்தில் உள்ள விவசாயிகளுக்கான புதுப்பித்தல் கட்டணமும் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு, உயிர்ம விவசாயிகளுக்கு உயிர்ம **"வாய்ப்புச் சான்றிதழ்"** இலவசமாக வழங்கப்படும். கடந்த ஆண்டு புதிதாகப் பதிவு செய்யும் விவசாயிகளுக்கு மட்டுமே கட்டண விலக்கு அளிக்கப்பட்ட நிலையில், இவ்வாண்டு முதல், உயிர்மச் சான்று பெறுவதற்கான **"மாறுதல் காலத்திலும்"** விவசாயிகள் தொடர்ந்து உயிர்ம நிலையினைக் கடைப்பிடிப்பதை ஊக்குவிக்கும் முகமாக **"மாறுதல் காலத்திற்கும்** இந்த கட்டண விலக்கு விரிவுபடுத்தப்படும்.

vii. தேசிய உயிர்ம உற்பத்தித் திட்டத்தில் சான்றளிக்கப்படும் உயிர்ம விளைபொருட்களில் நச்சுப் பொருட்களின் தன்மையினை விவசாயிகள் அறிந்து, அவற்றின் தரத்தை உறுதிப்படுத்தி அயல்நாட்டு மற்றும் உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்து அதிக விலை பெறவும், நஞ்சற்ற பொருட்களை நுகர்வோர் பெறவும், நச்சு மதிப்பீடுப் பரிசோதனை (Residue Analysis) செய்வதற்கான கட்டணத்திற்கு முழு மானியம் வழங்கும் பொருட்டு 25 இலட்சம் ரூபாய் மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

viii. களர், உவர் தன்மைகளால் பாதிக்கப்பட்ட மற்றும் வளம் குறைந்த நிலங்களை மீட்டெடுப்பதற்காக மண் சீர்திருத்தம் குறித்து 2,000 ஏக்கரில் செயல்விளக்கம் மேற்கொள்ள 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

ix. மண் நல மேம்பாடு குறித்த தொழில்நுட்பங்களை உழவர் பெருமக்களுக்கு எடுத்துரைக்க, விழிப்புணர்வு மற்றும் விளம்பரப் பணிகள் 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும்.

x. காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை எதிர்கொள்ள, நேரடி நெல் விதைப்பு, **"நீர் மறைய நீர் கட்டும்"** பாசனமுறை, 'மெல்லக் கரையும் உரங்களின்' பயன்பாட்டு முறைகளைப் பின்பற்றிப் பசுமைக்குடில் வாயு வெளியேற்றத்தை 50 சதவீதம் தவிர்த்து கரிமத்தை அகற்றி மண்ணில் சேமிக்கும் (Carbon

Sequestration) விவசாயிகளுக்கு, கார்பன் வர்த்தகம் வழியாகக் கூடுதல் வருமானம் பெறுவதை ஊக்குவிக்க 2,000 ஏக்கரில், செயல் விளக்கங்கள் அமைத்து, கண்காணிப்பு மற்றும் சீராய்வு நெறிமுறைகளை உருவாக்க மாநில நிதியிலிருந்து 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**தமிழ்நாடு மண்வளப் பாதுகாப்பு இயக்கம் 2026-27 ஆம் ஆண்டில் 122 கோடியே 51 இலட்சம் ரூபாய் நிதியில் 10 கூறுகளுடன் செயல்படுத்தப்படும்.**

## 2. நெல் விதை உற்பத்தி மற்றும் விதை விநியோக மானியத்திற்கான சிறப்புத் திட்டம்

விவசாயிகளுக்கு இடுபொருட்கள் போதிய அளவில் குறித்த பருவத்தில் கிடைக்கச் செய்ய, இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. நெல் உற்பத்தி, உற்பத்தித்திறனை அதிகரிப்பதில் முக்கியப் பங்களிப்பை வழங்கும் தரமான விதை உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கான மானியத்தினை 2026-2027ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசு நிறுத்திவிட்டது. ஆனால் விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று, அவர்களின் நலன் கருதி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு அறிவுறுத்தியபடி, விதைப்பண்ணைகள் அமைத்து 7,730 மெட்ரிக் டன் சான்று நெல் விதை உற்பத்தி செய்து தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமைக்கு வழங்கும் விவசாயிகளுக்கு, **"நெல் விதை உற்பத்தி" மானியமும்** 14,570 மெட்ரிக் டன்

சான்றளிக்கப்பட்ட விதைகளை மானியத்தில் விநியோகிக்க **"நெல் விதை விநியோக மானியமும்** வழங்குவதற்கு 2026–2027ஆம் ஆண்டில், 34 கோடியே 72 இலட்சம் ரூபாய் மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

**3. உழவர் செயற்கை நுண்ணறிவுத் (AI) திட்டம்**

**"சரியான நேரத்தில் விவசாயிகளுக்குக் கிடைக்கும் தகவல், சரியான நேரத்தில் பெய்யும் மழைக்கு நிகர்"** என்பதை உணர்ந்துதான் விவசாயிகளுக்குச் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வசதி ஏற்படுத்தி மண் வளம் மற்றும் பயிர் சாகுபடி குறித்த தகவல்களை உடனுக்குடன் வழங்க வேண்டும் என்ற தொலைநோக்குத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) மற்றும் இயந்திரவழி கற்றலுக்கு (Machine Learning) உரிய தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்து, வானிலை முன்னறிவிப்பு, மண் நலம் மற்றும் மண் வளம், பூச்சி, நோய் மேலாண்மை, பருவ நிலைக்கு ஏற்ற பயிர் என, விதைப்பு முதல் அறுவடை வரையிலான அனைத்துத் தொழில்நுட்ப ஆலோசனைகளும் சேவைகளும் வழங்கப்படும். இவற்றோடு சந்தை நிலவரம், குரல் வழி வேளாண் சேவைகள் (Voice–First Agriculture Services), அரசுத் திட்டங்கள் உள்ளிட்ட அனைத்து அறிவுசார் வேளாண் சேவைகளையும் விவசாயிகள் தங்களது கைப்பேசி வாயிலாக எளிதாகப் பெறும் வகையில், **2026–27 ஆம் ஆண்டில் "உழவர் செயற்கை நுண்ணறிவுத் திட்டம்" செயல்படுத்திட மாநில நிதியிலிருந்து 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

## 4. பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களில் தன்னிறைவுக்கான இயக்கம்

தமிழ்நாட்டில், பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துகள் சாகுபடிப் பரப்பினை அதிகரித்து அடுத்த ஐந்து ஆண்டுகளில், உற்பத்தியில் தன்னிறைவு அடையும் வகையில், **பயறுவகைகளில் 65 கோடியே 28 இலட்சம் ரூபாயிலும்**, **உணவு எண்ணெய் வித்துகளில் 138 கோடியே 36 இலட்சம் ரூபாயிலும், ஆக மொத்தம் 203 கோடியே 64 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில நிதி ஒதுக்கீட்டில் "பயறுவகைகள் மற்றும் உணவு எண்ணெய் வித்துகளில் தன்னிறைவுக்கான இயக்கம்"** செயல்படுத்தப்படும். இதன்படி, உளுந்து, துவரை, பச்சைப்பயறு, காராமணி உள்ளிட்ட பயறுவகைகளின் சாகுபடிப் பரப்பை 15 இலட்சத்து 19 ஆயிரம் ஏக்கரில் இருந்து 24 இலட்சத்து 70 ஆயிரம் ஏக்கராக விரிவாக்கம் செய்திடவும் உற்பத்தியை 3 இலட்சத்து 88 ஆயிரம் மெட்ரிக் டன்னிலிருந்து 7 இலட்சத்து 72 ஆயிரம் மெட்ரிக் டன்னாக அதிகரித்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், நிலக்கடலை, எள், சூரியகாந்தி, ஆமணக்கு போன்ற எண்ணெய் வித்துகளின் சாகுபடிப் பரப்பை 9 இலட்சத்து 26 ஆயிரம் ஏக்கரில் இருந்து 14 இலட்சத்து 89 ஆயிரம் ஏக்கராக விரிவாக்கம் செய்திடவும் உற்பத்தியை 8 இலட்சத்து 77 ஆயிரம் மெட்ரிக் டன்னிலிருந்து 16 இலட்சத்து 14 ஆயிரம் மெட்ரிக் டன்னாக அதிகரித்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 5. தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்

அதிக சத்துக்களுடன் நிறைய மருத்துவ குணங்களையும் உள்ளடக்கிய சிறுதானிய உணவுப் பழக்கம் வீடுகளில் தொடங்கி உணவகங்கள் வரை பரவத் தொடங்கியுள்ளது. இவற்றின் தேவையைக் கருத்தில் கொண்டு, கம்பு, சோளம், கேழ்வரகு போன்ற சிறுதானியங்களின் சாகுபடிப் பரப்பு, உற்பத்தி, உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கில் **"தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்"** செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2026 – 27 ஆம் ஆண்டில், உழவர் குழுக்கள் அமைத்தல், மாற்றுப்பயிர் சாகுபடித் தொகுப்பு மானியம், சிறுதளைகள் விநியோகம், வேளாண் இயந்திர வாடகை மையங்கள், முதன்மை பதப்படுத்தும் மையங்கள் போன்ற இனங்கள், 63 கோடியே 81 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் வாயிலாக, 11 இலட்சத்து 80 ஆயிரம் ஏக்கர் பரப்பில் சிறுதானியப் பயிர் சாகுபடி செய்யும் 4 இலட்சத்து 75 ஆயிரம் விவசாயிகள் பயனடைவர்.

## 6. தமிழ்நாடு குறுதானிய இயக்கம்

தமிழ்நாட்டில் வறட்சியைத் தாங்கக்கூடிய, குறைந்த நீர்த்தேவை கொண்ட, அதிக ஊட்டச்சத்து, நார்ச்சத்துடைய குறுதானியங்களான சாமை, தினை, வரகு, குதிரைவாலி, பனிவரகு போன்றவை சராசரியாக 61 ஆயிரத்து 750 ஏக்கரில் சாகுபடி செய்யப்படுகின்றன. இந்நிலையில், குறுதானியங்களின் சாகுபடிப் பரப்பை இருமடங்காக அதிகரிக்கும் நோக்கில்,

2026-27 **ஆம் ஆண்டில்,** தமிழ்நாட்டில் 29 மாவட்டங்களில் **"தமிழ்நாடு குறுதானிய இயக்கம்"** செயல்படுத்த **7 கோடியே 61 இலட்சம் ரூபாய்** மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

**7. அதிக ஊட்டச்சத்து நிறைந்த சீமைத் தினை (Quinoa), பாப்பரை (Buck Wheat) குலசாமை (Brown Top Millet) ஆகிய பயிர்களை அறிமுகப்படுத்துதல்**

புரதசத்து, நார்ச்சத்து, கால்சியம், பொட்டாசியம், இரும்பு, வைட்டமின் ஆகியவை அதிகமாகவும், குளூட்டன், கிளைசிமிக் குறியீடு குறைவாகவும் உள்ள தானியப்பயிர்களான சீமைத் தினை, பாப்பரை மற்றும் குலசாமை ஆகிய பயிர்களைத் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தும் நோக்கில், அவற்றைச் சாகுபடி செய்வதற்கு உகந்த தட்பவெப்ப நிலை கொண்ட நீலகிரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, சேலம் முதலிய மாவட்டங்களில், **30 இலட்சம் ரூபாய்** மாநில நிதி ஒதுக்கீட்டில், செயல்விளக்கத் திடல்கள் அமைக்கப்படும்.

**8. பருத்தி மறுமலர்ச்சி இயக்கம்**

இந்தியாவின் மொத்த நூற்புத் திறனில் 46 சதவீதம், விசைத்தறித் திறனில் 22 சதவீதம், கைத்தறித் திறனில் 12 சதவீதம், பருத்தி பின்னலாடை உற்பத்தியில் 70 சதவீதம் தமிழ்நாட்டில் அமைந்து, நாட்டின் ஜவுளி மற்றும் ஆடைத் துறையின் வளர்ச்சியில் தமிழ்நாடு முக்கியப் பங்காற்றி வருகிறது. 'வெள்ளைத் தங்கம்' என்றும், 'King of Fibre' என்றும் அழைக்கப்படும் பருத்தி, தமிழ்நாட்டில் சராசரியாக 3 இலட்சத்து

14 ஆயிரம் ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு 2 இலட்சத்து 50 ஆயிரம் பொதிகள் (Bales) உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனால், தமிழ்நாட்டில் செயல்படும் பருத்தி நூற்பாலைகளின் தேவையான 120 இலட்சம் பொதிகளில், 98 சதவீதம் பிற மாநிலங்களில் இருந்தே பெறப்படுகிறது. எனவே, பருத்தி உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்கில், உயர் விளைச்சல் தொழில்நுட்பங்களான அடர் நடவு, நெருக்க நடவு, ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை, நுனிக்கிள்ளுதல் ஆகியவற்றோடு வருமானத்தைப் பெருக்கும் நோக்கில் மிக நீண்ட இழை பருத்தி சாகுபடி, ஊடுபயிர் சாகுபடி ஆகியவற்றையும் ஊக்குவிக்க **"பருத்தி மறுமலர்ச்சி இயக்கம்"** 2026-27 ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுத் திட்டமாக செயல்படுத்தப்படும். நடப்பாண்டில், 73 ஆயிரத்து 360 ஏக்கர் பரப்பளவில் 27 கோடியே 21 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில், 40 ஆயிரம் பருத்தி விவசாயிகள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### 9. மக்காச்சோள உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில், கோழித்தீவனம் மற்றும் எத்தனால் தொழிற்சாலைகளில் "மக்காச்சோளம்" முக்கிய மூலப்பொருளாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வரும் மக்காச்சோளத்தின் தேவையை நிறைவு செய்து, விவசாயிகள் நல்ல வருமானம் ஈட்டிடும் வகையில், 2026 – 27 ஆம் ஆண்டில் **"மக்காச்சோள உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம்"**, 3 இலட்சத்து 47 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் ஒரு இலட்சத்து 39 ஆயிரம் விவசாயிகள்

பயனடையும் வகையில், **36 கோடி ரூபாய்** ஒன்றிய, மாநில நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**10. வேளாண் காடுகள் திட்டம்**

தமிழ்நாட்டின் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்திடவும், விவசாய நிலங்களில் நிரந்தர பசுமைச் சூழ்நிலையினை உருவாக்கிடவும் வேளாண் காடுகள் திட்டத்தைச் செயல்படுத்திட, 2026 – 27 ஆம் ஆண்டில், **17 கோடியே 70 இலட்சம் ரூபாய்** ஒன்றிய, மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் நாற்றங்கால்கள் அமைத்து, தரமான மரக்கன்றுகள் உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும்.

இத்திட்டத்தில் தரிசு நிலங்களைச் சாகுபடிக்கு மீளக் கொண்டு வந்து விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தி, சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் நிலையான வேளாண்மையையும் மேம்படுத்துவதற்காக 12,500 ஏக்கர் பரப்பிலான சாகுபடிக்கு ஏற்ற தரிசு நிலங்கள் மீட்டெடுக்கப்பட்டு, தேக்கு, மகோகனி, சந்தனம், மலைவேம்பு, செம்மரம் உள்ளிட்ட பொருளாதார மதிப்புமிக்க மரவகைகளை ஒரு ஏக்கருக்கு 200 மரக்கன்றுகள் வீதம் நடவு செய்து வேளாண் காடுகள் உருவாக்கப்படும்.

**11. உயர் விளைச்சலுக்கு உகந்த சான்று விதைகள்**

விவசாயிகள் சான்று விதைகளைப் பயன்படுத்துவதால் 25 சதவீதம் வரை மகசூலை அதிகரிக்க இயலும். இதனை நோக்கமாகக் கொண்டு, தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை வாயிலாக 2026 – 27 ஆம் ஆண்டில், அரசு

விதைப்பண்ணைகள் மற்றும் விவசாயிகளின் நிலங்களில் நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துகள், பருத்தி போன்ற பயிர்களுக்கு விதைப்பண்ணைகள் அமைத்து **43 ஆயிரத்து 400 மெட்ரிக் டன் சான்று விதைகள், 250 கோடி ரூபாய்** "தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை" நிதியிலிருந்து கொள்முதல் செய்து, விவசாயிகளுக்கு ஒன்றிய, மாநில அரசின் பல்வேறு திட்டங்களின்கீழ் மானிய விலையில் விநியோகம் செய்யப்படும். இதன் மூலம் சுமார் 10 இலட்சம் விவசாயிகள் பயனடைவார்கள்.

## 12. காட்டுப்பன்றி சேதத் தடுப்புத் திட்டம்

வனவிலங்குகளிலிருந்து பயிர்களைப் பாதுகாக்க பல்வேறு முறைகள் தொன்றுதொட்டே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பறவைகளைக் கவண் கொண்டு அடித்தும், மூங்கிலால் செய்த தட்டை என்ற இசைக்கருவியை முழக்கியும் மகளிர் தினைப்புனம் காத்ததை,

**"ஒலிகழைத் தட்டை புடையுநர் புனம்தொறும்**

**கிளிகடி மகளிர் விளிபடு பூசல்"** என்றும்,

பன்றிகள் செல்லும் சிறிய வழிகளில், அவை புகுந்து மாட்டிக்கொள்ளும்படியான பெரிய கற்பலகையாலான அடார் என்னும் அரிய பொறிகள் வைத்து ஆடவர் காத்ததை,

**" விளை புனம் நிழத்தலின், கேழல் அஞ்சி,**

**புழைதொறும் மாட்டிய இருங் கல் அடாஅர்**

**அரும் பொறி "**

என்றும் மலைபடுகடாம் நம் கண்முன்னே விரிக்கிறது.

அண்மைக் காலங்களில் தமிழ்நாட்டில் காட்டுப்பன்றிகளால் பயிர்கள் தொடர்ந்து சேதமடைந்து, விவசாயிகள் பெரும் பொருளாதார இழப்பைச் சந்தித்து வருகின்றனர். காட்டுப்பன்றியால் ஏற்படும் பயிர் இழப்புகளைத் தடுக்கும் நோக்கில் பெரும்பான்மையான விவசாயிகளின் கோரிக்கைக்கு இணங்க, இதற்கான சிறப்புத் திட்டம் 2026–27 ஆம் ஆண்டில் 7 கோடியே 35 இலட்சம் ரூபாய் நிதியில் செயல்படுத்தப்படும்.

i. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU) உருவாக்கியுள்ள சுற்றுச்சூழலுக்கு உகந்த திரவ வடிவிலான காட்டுப்பன்றி விரட்டி, விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கப்படும். இத்திட்டம் 14 ஆயிரம் ஏக்கரில், **ஒரு கோடியே 35 இலட்சம் ரூபாய்** மாநில நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

ii. காட்டுப்பன்றி மட்டுமல்லாது யானை, காட்டெருமை, மான் போன்ற பிற வனவிலங்குகளாலும் பயிர்களுக்கு ஏற்படும் சேதத்தைக் குறைத்திட நடப்பாண்டில் 134 விவசாயிகளுக்கு 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் சூரிய சக்தியால் இயங்கும் மின்வேலி அமைப்புகள் மானியத்தில் நிறுவப்படும்.

iii. பெரும்பாலான மாவட்டங்களில் சீமைக் கருவேல மரங்கள் அடர்ந்துள்ள இடங்களைக் காட்டுப்பன்றிகள் தங்கள் வாழ்விடமாகக் கொண்டு அருகிலுள்ள விளை நிலங்களில் பயிர்களைச் சேதப்படுத்துகின்றன. எனவே, காட்டுப்பன்றிகளைக் கட்டுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், மண் வளத்தை மீட்டு சுற்றுச்சூழலையும் பாதுகாக்கும்

வகையில் அரசு மற்றும் தனியார் நிலங்களில் உள்ள சீமைக் கருவேல மரங்களை அகற்றும் பணிகள் **4 கோடி ரூபாய்** மாநில நிதியில் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் வாயிலாக செயல்படுத்தப்படும்.

## 13. அண்ணல் அம்பேத்கர் வேளாண் உதவித் திட்டம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் திட்டப் பலன்களைத் தடையின்றி அடையவும், நீராதாரங்களை உருவாக்கி உற்பத்தியை அதிகரித்து வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திக்கொள்ளவும், "**அண்ணல் அம்பேத்கர் வேளாண் உதவித் திட்டம்**" செயல்படுத்தப்படும்.

i. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகள், உயர்மதிப்பு வேளாண் திட்டங்களில் செலுத்தவேண்டிய பயனாளி பங்களிப்புத் தொகை, அவர்களுக்கு பெரும் சுமையாக இருப்பதால், அச்சுமையைக் குறைத்து திட்டங்களின் பயனை அவர்கள் அடையும் வண்ணம் இத்திட்டத்தில் 20 சதவீத கூடுதல் மானியம் வழங்கப்படும். இதன்படி, ஒன்றிய, மாநில அரசு பங்களிப்புத் திட்டங்களில் ஒருங்கிணைந்த பண்ணையம், பசுமைக்குடில்கள், நிழல் வலைக்குடில்கள், சூரியக்கூடார உலர்த்திகள், மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள், பண்ணை இயந்திரங்கள் போன்றவற்றிற்கு 70 சதவீதமும், சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் அமைத்திட 80 சதவீதமும் மானியம் வழங்கப்படும்.

ii. நீர்ப்பாசன வசதியில்லாத 300 ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகளின் புன்செய் நிலங்களில், நீர்ப்பாசன ஆதாரமாக ஆழ்துளை அல்லது குழாய்க்கிணறுகள் 100 சதவீத மானியத்தில் மின் மோட்டார் அல்லது சூரிய சக்தி பம்புசெட்டுகளுடன் அமைக்கப்படும்.

**2026–27ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென 56 கோடியே 72 இலட்சம் ரூபாய் மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.**

## 14. விளைபொருள் வீணாவதைத் தடுக்க தார்ப்பாய்கள் வழங்குதல்

மழை போன்ற இயற்கை நிகழ்வுகளிலிருந்து விளைபொருட்கள் வீணாகாமல் பாதுகாக்கவும், விளைவித்த தானியங்களை உலர்த்துவதற்கும் பெரும்பான்மையான விவசாயிகளின் கோரிக்கைக்கு இணங்க, 2026–27 ஆம் ஆண்டில் **10 கோடி ரூபாய்** மாநில நிதி ஒதுக்கீட்டில் 43 ஆயிரத்து 500 விவசாயிகளுக்கு தார்ப்பாய்கள் வழங்கப்படும்.

## 15. மக்கள் சேவகர் அஞ்சலையம்மாள் சிறு, குறு விவசாயி விருது

2026–27 ஆம் ஆண்டில், சிறு, குறு விவசாயிகளை ஊக்குவிக்க, **'மக்கள் சேவகர் அஞ்சலையம்மாள்'** பெயரில் மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துகள் உள்ளிட்ட 10 பயிர்களில் அதிக மகசூல் பெறும் முதல்

3 விவசாயிகளுக்கு முறையே 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய், ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய், ஒரு இலட்சம் ரூபாய் என மொத்தம் 30 விவசாயிகளுக்குப் பரிசுகள் வழங்க **50 இலட்சம் ரூபாய்** மாநில நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

**16. மாவட்ட அளவிலான "வெற்றி விவசாயி" விருது**

நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துகள், பருத்தி உள்ளிட்ட ஒன்பது பயிர்களில் இரண்டு ஏக்கர் பரப்பளவில் பயிரிட்டு, அதிக மகசூல் பெறும் விவசாயிகளுக்கு, **மாவட்ட அளவில் "வெற்றி விவசாயி விருது"** வழங்கப்படும். முதல் பரிசாக 50 ஆயிரம் ரூபாய், இரண்டாம் பரிசாக 25 ஆயிரம் ரூபாய் என 90 பரிசுகள், **67 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்** மாநில நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்படும்.

**17. சிறந்த உயிர்ம விவசாயிக்கான நம்மாழ்வார் விருது**

உயிர்ம வேளாண்மையினைத் தமிழ்நாட்டில் பரவலாக்குவதன் ஒரு பகுதியாக, 2026 –27 ஆம் ஆண்டில், உயிர்ம வேளாண் முறையில் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளைச் சிறப்பிக்கும் வகையில், சிறந்த உயிர்ம விவசாயிக்கான **"நம்மாழ்வார் விருது"** 5 விவசாயிகளுக்கு வழங்கப்படும். பாராட்டுப் பத்திரத்துடன் தலா 2 இலட்சம் ரூபாய் ரொக்கமும் கொண்ட இந்த விருதுகளை வழங்க, **11 இலட்சம்** ரூபாய் மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

**18. ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களுக்குப் புதிய கட்டடங்கள்**

வேளாண்மை – உழவர் நலத்துறையின் அனைத்துத் திட்டங்களையும் தொழில்நுட்ப ஆலோசனைகளையும் விவசாயிகள் ஒரே இடத்தில் பெற்றுப் பயனடையும் பொருட்டு, திருவண்ணாமலை, காட்பாடி மற்றும் குடியாத்தம் (வேலூர்), முசிறி (திருச்சிராப்பள்ளி), நரிக்குடி (விருதுநகர்), போடிநாயக்கனூர் (தேனி), கயத்தாறு (தூத்துக்குடி) மற்றும் தொண்டாமுத்தூர் (கோயம்புத்தூர்) வட்டாரங்களில், 300 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குடன் கூடிய எட்டுப் புதிய ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கான கட்டடங்கள், **27 கோடியே 82 இலட்சம் ரூபாய்** ஒன்றிய, மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் கட்டப்படும்.

**19. வேளாண் கண்காட்சி**

நவீன வேளாண் தொழில்நுட்பங்கள், நன்னெறி வேளாண் செயல்பாடுகள், மதிப்புக்கூட்டப்பட்ட வேளாண் பொருட்கள், மதிப்புக்கூட்டு இயந்திரங்கள், வேளாண் இயந்திரங்கள், இயற்கை வேளாண் முறைகள் குறித்த விழிப்புணர்வை விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடம் ஏற்படுத்த **வேளாண் கண்காட்சி (Agri Expo), 3 கோடி ரூபாய் மாநில நிதி** ஒதுக்கீட்டில் நடத்தப்படும்.

இக்கண்காட்சியில் சாகுபடி முறைகள், வேளாண் சார்ந்த புதுமையான முயற்சிகள் காட்சிப்படுத்தப்பட்டு, பயிர்

உற்பத்தித்திறன், விவசாயிகளின் வருமானம் ஆகியவற்றை அதிகரிக்கத் தேவையான வழிகாட்டுதல்கள் வழங்கப்படும்.

**20. திரவ உயிர்உர உற்பத்தி மையங்களின் கட்டமைப்பை மேம்படுத்துதல்**

தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறையின் 22 திரவ உயிர்உர உற்பத்தி மையங்களின் கட்டமைப்பை வலுப்படுத்திட புதிய நொதிகலன், இன்குபேட்டர், நீராவி ஜெனரேட்டர் உள்ளிட்ட உபகரணங்கள் நிறுவ 3 **கோடியே 56 இலட்சம் ரூபாய்** நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**21. புதிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல்**

விதை சுத்திகரிப்புத் திறனை அதிகரிக்கும் நோக்கில், சேலம் மாவட்டம் கங்கவல்லி, தூத்துக்குடி மாவட்டம் கிள்ளிகுளம், விழுப்புரம் மாவட்டம் இருவேல்பட்டு ஆகிய மூன்று இடங்களில் தலா **250 மெட்ரிக் டன் விதை சேமிப்புக் கிடங்குகளுடன் கூடிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள்**, **7 கோடியே 10 இலட்சம் ரூபாய் மாநில நிதி** ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

**சர்க்கரைத்துறை**

**22. விதைக்கரும்பு மானியத் திட்டம்**

கரும்பு சாகுபடியில் இயந்திர அறுவடையை ஊக்குவித்து செலவினத்தை குறைத்திட அகலப்பார் முறையில் உயர்விளைச்சல் மற்றும் உயர் சர்க்கரைக் கட்டுமானம்

கொண்ட கரும்பு இரகங்களை நடவு செய்ய முன்வரும் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் பருசீவல் நாற்றுகள், ஒருபரு விதைக்கரணைகளை வழங்கிட 9 கோடியே 36 இலட்சம் ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 17 ஆயிரத்து 315 ஏக்கர் பரப்பளவில் திட்டம் செயல்படுத்தப்படும்.

## 23. கரும்பு சாகுபடி மேம்பாட்டுத் திட்டம்

கரும்பு சாகுபடிப் பரப்பை அதிகரிக்கவும் சாகுபடி செலவைக் குறைக்கவும் **"கரும்பு சாகுபடி மேம்பாட்டுத் திட்டம்"** செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் வல்லுநர் விதைக்கரும்பு, திசு வளர்ப்பு நாற்றுகள், பருசீவல் நாற்றுகள், ஒரு பரு விதைக் கரணைகள், சோகை உரித்தல், நிழல் வலைக்கூடம் அமைத்தல், சோகை தூளாக்குதல் மற்றும் பரப்புதல், நுண்ணூட்ட உரக் கலவை மற்றும் உயிர் உரங்கள் வழங்குதல் ஆகிய இனங்களுக்கு மானியம் வழங்கப்படும். இத்திட்டத்திற்காக **9 கோடி** ரூபாய் ஒன்றிய, மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 24. கள்ளக்குறிச்சி–1 கூட்டுறவு சர்க்கரை ஆலையில் எத்தனால் உற்பத்தி குறித்த சாத்தியக் கூறு ஆய்வு

கள்ளக்குறிச்சி–1 கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கள்ளக்குறிச்சி–2 மற்றும் செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் கூட்டமைப்பின் (Consortium) பேரில் நாளொன்றுக்கு 100 கிலோ லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட எத்தனால் வடிப்பாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை (DPR) மற்றும் சாத்தியக்கூறு அறிக்கை (Feasibility report)

தயாரித்திட 20 இலட்சம் ரூபாய் மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

**தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

விவசாயிகளுக்குத் தொடர் வருமானம் அளித்து, மக்களுக்கு ஊட்டச்சத்துப் பாதுகாப்பினை அளிப்பதில் பங்காற்றி, உணவு பதப்படுத்தும் தொழில்களுக்கு மூலப்பொருட்களாகவும் விளங்கும் காய்கறிகள், பழங்கள், மலர்கள், சுவை தாளிதப் பயிர்கள் போன்ற தோட்டக்கலைப் பயிர்களின் வளர்ச்சி தமிழ்நாட்டில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெறுகிறது. தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி, உற்பத்தித்திறனை உயர்த்தவும், உலகளாவிய சந்தைக்கான தரமான தோட்டக்கலை விளைபொருள் உற்பத்திக்கும் தோட்டக்கலைத் துறை பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**25. நீர் மேலாண்மைக்கான துளித் துளித் தண்ணீர் திட்டம்**

**"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி**
**தான்நல்காது ஆகி விடின்" (திருக்குறள் 17)**

மேகமானது கடல் நீரை முகந்து சென்று மீண்டும், மழையாகப் பெய்யாவிட்டால் அப்பெரிய கடலும் தன் வளமையில் குறைந்து போகும் என்பது திருவள்ளுவரின் வாக்கு.

இதன் அடிப்படையில், நீரினைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, தமிழ்நாட்டில் நீர் மேலாண்மையை மேம்படுத்தி, இருக்கும் நீர் ஆதாரங்களைத் திறம்படப் பயன்படுத்தி, பயிர் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் நுண்ணீர்ப் பாசனத் திட்டம் ஒன்றிய, மாநில நிதிப் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது.

அரசின் தொலைநோக்குத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 2026-27 ஆம் ஆண்டில், **2 இலட்சத்து 22 ஆயிரத்து 794 ஏக்கரில்**, **95 ஆயிரம் விவசாயிகள்** பயன்பெறும் வகையில், **785 கோடி ரூபாய்** நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**26. பனை பாதுகாப்பு இயக்கம்**

**"கற்பக விருட்சம்"** என்றழைக்கப்படும் பனை மரம் தமிழர்களின் வாழ்வோடும் வரலாற்றோடும் பின்னிப் பிணைந்து தமிழ்நாட்டின் மாநில மரமாகத் திகழ்ந்து வருகிறது. ஏறத்தாழ மூன்று இலட்சம் விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள் பனை மரத்தின் வருவாயை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர்.

பனைமரங்களின் பாதுகாப்பை உறுதி செய்து, பனை மற்றும் பனைப்பொருட்கள் உற்பத்தியை ஊக்குவிக்க அரசின் தொலைநோக்குத் திட்டத்தின்படி, 2026-27 ஆம் ஆண்டு

முதல் **"பனை பாதுகாப்பு இயக்கம்"** தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் பனை மரங்களை வெட்டுவதை முறைப்படுத்துவதற்காக ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ள மாவட்ட, வட்டாரக் குழுக்கள் முடுக்கிவிடப்பட்டு கண்காணிக்கப்படும். இத்துடன், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் கூடங்கள் அமைத்தல், பனை விதைகள், பனங்கன்றுகள் விநியோகம், பனை பொருள் வளர்ச்சி வாரியத்தினால் பனை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள், பனை ஓலைப் பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சியும் அதற்கான உபகரணங்களும் வழங்குதல் முதலிய திட்டக்கூறுகள் **இரண்டு கோடியே 10 இலட்சம் ரூபாய் மாநில நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்**.

இது தவிர, தூத்துக்குடி மாவட்டம், கிள்ளிகுளம் பனை ஆராய்ச்சி நிலையத்தில், குட்டைப் பனை, விரைவில் காய்ப்புக்கு வரும் பனை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் ஆராய்ச்சிகள் துரிதப்படுத்தப்பட்டு, அவற்றின் பலன்கள் விவசாயிகளின் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு சேர்க்கப்படும்.

**27. "வெற்றி இல்லத்தரசி வீட்டுத்தோட்டம்"**

வீட்டுத்தோட்டங்களில் இரசாயன உரங்களைப் பயன்படுத்தாமல் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி நச்சுத்தன்மையற்ற பழங்களும் காய்கறிகளும் உற்பத்தி செய்யப்படுவதால் ஊட்டச்சத்துப் பாதுகாப்பு

உறுதிப்படுத்தப்படுவதுடன், சுற்றுச்சூழல் மாசுபடுவதும் குறைகிறது.

எனவே, நகர்ப்புரங்களில் அமைந்துள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளிலும் கிராமப்புரங்களில், வீட்டைச் சுற்றியுள்ள நிலப் பகுதிகளிலும் செடி வளர்ப்புப் பைகளுடன் கூடிய தொகுப்புகள், செங்குத்துத் தோட்டம் மற்றும் நீரியல் தோட்டம் ஆகிய அமைப்புகளில் காய்கறிகள், பழங்கள், மூலிகைச் செடிகள் போன்றவற்றை வளர்த்து மனமலர்ச்சியையும், நலமான சூழலையும் ஏற்படுத்த **"வெற்றி இல்லத்தரசி வீட்டுத்தோட்டம் திட்டம்"** நடப்பாண்டில் 10 கோடி ரூபாய் மாநில நிதியில் செயல்படுத்தப்படும்.

## 28. தமிழ்நாடு தளிர்க்கீரைகள் திட்டம் (Tamil Nadu Microgreens Scheme)

ப்ரோக்கோலி, முட்டைக்கோசு, முள்ளங்கி, பச்சைப் பட்டாணி, கொண்டைக்கடலை, ஆளிவிதைகள், வெங்காயம், பச்சைப்பயறு, கொள்ளு, எள், கோதுமை, கீரை வகைகள் ஆகியவற்றின், 7 முதல் 21 நாட்கள் வயதுடைய இளம் நாற்றுக்கள், தளிர்க்கீரைகள் (Microgreens) என்றழைக்கப்படுகின்றன. இந்த தளிர்க்கீரைகளில் முதிர்ந்த செடியினை விட 40 மடங்கு வரை அதிக ஊட்டச்சத்துகள் உள்ளதாக அறியப்படுகிறது.

எனவே புதிய முயற்சியாக, பொதுமக்களிடையே தளிர்க்கீரைகள் வளர்ப்பினை ஊக்குவிக்கும் வகையில், விதைகள், விதை வளர்ப்புத் தட்டுகள், தென்னைநார்க்

கட்டிகள், நீர்த்தெளிப்புக் கருவி, வழிமுறைக் கையேடு ஆகியவற்றை உள்ளடக்கிய 20,000 தளிர்க்கீரை தொகுப்புகள் சென்னை, கோயம்புத்தூர், திருச்சி போன்ற முக்கிய நகர்ப்புரப் பகுதிகளில் விநியோகம் செய்யப்படும். இதற்கென, 2026-27ஆம் ஆண்டில், 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 29. தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தியை உயர்த்த உயர் தொழில்நுட்ப சாகுபடி முறைகளை ஊக்குவித்தல்

உயர் தொழில்நுட்பங்களையும் தேவையான சிறப்புக் கட்டமைப்புகளையும் விவசாயிகளிடையே ஊக்குவிப்பதன் வாயிலாக தோட்டக்கலைப் பயிர்களில் உற்பத்தியினையும் உற்பத்தித்திறனையும் பெருமளவு உயர்த்த இயலும் என்பதால் அதற்கான சிறப்புத் திட்டங்கள் 2026-27ஆம் ஆண்டில், மொத்தம் 41 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

i. சாமந்தி மலர் சாகுபடியில் பருவநிலை மாறும் காலங்களில் சூரிய ஒளி பெறும் கால அளவு (**பகற்பொழுது/Photoperiod)** மாறுபடுவதால் சாமந்தி உற்பத்தியும் அதற்கேற்ப மாறுபடுகிறது. இதனால் செடிகளின் வளர்ச்சி குறைந்து, சிறிய பூக்கள் சீரற்ற முறையில் விரிந்து, தரமும் மகசூலும் குறைவதால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது. இச்சவாலை எதிர்கொள்ளும் வகையில் **சாமந்தி சாகுபடி செய்யும் விவசாயிகளின் கோரிக்கைக்கு இணங்க**, பருவநிலை மாறுபடும் காலங்களில் தேவையான கூடுதல்

ஒளியை ஏற்படுத்தி செடிகளின் வளர்ச்சியைத் தூண்டுவதன் வாயிலாக, பூக்கும் தருணத்தை சந்தைத் தேவைக்கேற்ப மாற்றுவதற்கு எல்.இ.டி (LED) விளக்குகள் அமைக்கும் திட்டம் நடப்பாண்டில் ஐந்து கோடி ரூபாய் மாநில நிதியில் செயல்படுத்தப்படும்.

ii. **பசுமைக்குடில், நிழல்வலைக் குடிலில்** உயர் மதிப்புள்ள தோட்டக்கலைப் பயிர்களைச் சாகுபடி செய்யும்போது, காற்று, மழை, அதிக வெப்பம், பூச்சி, நோய்த் தாக்குதல்களிலிருந்து பயிர்கள் பாதுகாக்கப்படுவதுடன், ஆண்டு முழுவதும் தொடர்ந்து உற்பத்தி செய்யவும் முடிகிறது. குறைந்த இடத்தில் 5 முதல் 7 மடங்கு அதிக மகசூலும், தரமான விளைபொருளும் அளித்து சந்தையில் நல்ல விலை கிடைக்கச் செய்வதை உறுதி செய்யும் இச்சாகுபடி முறையைப் பரவலாக்க, **2026–27 ஆம் ஆண்டில், 15 கோடியே 55 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில நிதியில், 3 இலட்சம் சதுர மீட்டர் பரப்பில் பசுமைக்குடில் மற்றும் நிழல்வலைக் குடில்கள் அமைக்கப்படும்.**

iii. **பழ உறை மற்றும் வாழையில் குலை உறை** பயன்படுத்துவதால் பூச்சி, நோய் தாக்குதல்கள், பறவைகள், அதிக வெப்பம், மழை ஆகியவற்றிலிருந்து பழங்கள் பாதுகாக்கப்பட்டுப் பழங்களின் தரமும் தோற்றமும் மேம்படுகின்றன. கூடுதல் நன்மையாக, பூச்சிக்கொல்லிப் பயன்பாடு குறைவதுடன், சந்தை மதிப்பும் விவசாயிகளின் வருமானமும் அதிகரிக்கின்றன. **எனவே விவசாயிகளின் கோரிக்கையின் அடிப்படையில், 2026–27 ஆம் ஆண்டில்,**

2,500 ஏக்கரில் சாகுபடி செய்யப்படும் மா, கொய்யா போன்ற பழப் பயிர்களுக்கு பழ உறையும், வாழைக்கு குலை உறையும் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதியில் வழங்கப்படும்.

iv. பருவநிலை மாற்றத்தால் நிகழும் இயற்கைப் பேரிடர்களின் தாக்கத்தால் தற்காலிகப் பந்தல் அமைப்பில் சாகுபடி செய்யப்படும் கொடி வகைத் தோட்டக்கலைப் பயிர்களுக்கு அதிக சேதம் ஏற்பட்டுப் பொருளாதார இழப்பு ஏற்படும் சூழலில், **நிரந்தரப் பந்தல் அமைப்பை ஊக்குவிக்க, நடப்பாண்டில் ரூபாய் 11 கோடியே 73 இலட்சம் நிதியில் "நிரந்தரப் பந்தல் அமைக்கும் திட்டம்" செயல்படுத்தப்படும்.**

v. வாழை சாகுபடி செய்யும் மாவட்டங்களில் வாழைக் குலைகளின் எடை மற்றும் லேசான காற்றினால் வாழை மரங்கள் சாய்வதால் ஏற்படும் மகசூல் இழப்புகளைத் தவிர்க்க, **வாழைக்கு முட்டுக்கொடுக்க நிதி உதவி வேண்டி விவசாயிகளிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன**. இதன் அடிப்படையில், 2026-27 ஆம் ஆண்டில், 6 கோடியே 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 6,175 ஏக்கரில் **வாழைக்கு முட்டுக்கொடுத்தல் திட்டம்** செயல்படுத்தப்படும்.

### 30. தரத்திற்கான உறுதி; ஏற்றுமதிக்கான முன்னேற்றம்

ஏற்றுமதி செய்யப்படும் பழங்கள், காய்கறிகளில் எஞ்சிய நஞ்சு காரணமாக, இறக்குமதி செய்யப்படும் நாடுகளால் இவ்விளைபொருட்கள் நிராகரிக்கப்படுவதால், விவசாயிகளும், ஏற்றுமதியாளர்களும் பொருளாதார

இழப்பைச் சந்திக்கின்றனர். இதனைத் தடுக்கும் விதமாக, 2026–27–ஆம் ஆண்டில், புதிய முன்னெடுப்பாக, 3,000 ஏக்கரில் மா, கொய்யா, தக்காளி, முருங்கை, சின்ன வெங்காயம் ஆகிய பயிர்களைக் குழுவாகச் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு நன்னெறி வேளாண் நடைமுறைகளைக் (Good Agricultural Practices) கொண்டு நஞ்சில்லா விளைபொருட்களை உற்பத்தி செய்வதற்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், தொழில்நுட்ப வழிகாட்டுதல்கள் மற்றும் தேவையான கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டு ஏற்றுமதியாளர்களுடனும் சந்தைகளுடனும் வலுவான இணைப்புகள் ஏற்படுத்தப்படும். இத்திட்டம் 8 கோடியே 43 இலட்சம் ரூபாய் நிதியில் 23 பயிர் தொகுப்புகளில் (Cluster) செயல்படுத்தப்படும்.

**31. தென்னைக்கான சிறப்புத் திட்டம்**

**"வேர் முதல் நுனி வரை பயன்தரும்– தென்னை**
**என்றும் மனிதனின் உற்ற துணை"**

தமிழ்நாட்டில் சுமார் 5 இலட்சம் எக்டரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு சுமார் 670 கோடி தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தென்னை சாகுபடியிலும் சந்தைப்படுத்துவதிலும் தற்போது விவசாயிகள் சந்தித்து வரும் சவால்களைக் கருத்தில் கொண்டு பூச்சி நோய்த்தாக்குதல்களுக்குத் தீர்வளித்தல், உற்பத்தித்திறனை அதிகரித்தல், மதிப்புக்கூட்டலை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான இனங்களைக் கொண்டு **"தென்னைக்கான**

**சிறப்புத் திட்டம்" மொத்தம் 16 கோடி ரூபாய் மாநில நிதியில் செயல்படுத்தப்படும்.**

i. தென்னை டானிக் பயன்படுத்துவதால் மண்ணில் உள்ள ஊட்டச்சத்துக்கள் திறம்பட உறிஞ்சப்படுவதுடன், மரங்களின் வளர்ச்சித் திறன் மேம்பட்டு, பூக்கள் மற்றும் காய் பிடித்தல் அதிகரிக்கும். எனவே, **தென்னை விவசாயிகளின் கோரிக்கைக்கு இணங்க**, தென்னை மரங்களின் நலத்தையும் உற்பத்தித்திறனையும் மேம்படுத்தும் நோக்கில், 2026–27ஆம் ஆண்டில், 86 ஆயிரம் ஏக்கரிலான தென்னை மரங்களுக்கு **"தென்னை டானிக்"** வழங்குவதற்காக 6 கோடியே 20 இலட்சம் ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

ii. தென்னையைத் தாக்கும் வேர்வாடல் நோய் மற்றும் சுருள் வெள்ளை ஈ ஆகியவற்றின் பாதிப்பால், 35 முதல் 80 விழுக்காடு வரை மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இப்பாதிப்பைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை முறைகளுடன் நீடித்த, நிலையான உயிரி கட்டுப்பாட்டு முறைகளைத் தென்னை விவசாயிகளிடையே பெருமளவில் பரவலாக்கம் செய்திட 1,350 ஏக்கர் பரப்பளவில் 'அபெர்டோகிரைசா' என்ற இரைவிழுங்கிப் பூச்சிகள் மற்றும் **'கோகோகான்'** நுண்ணுயிர்க் கலவை ஆகியவை 75 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இத்திட்டத்திற்காக ஒரு கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

iii. தென்னையைத் தாக்கும் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈயைத் திறம்படக் கட்டுப்படுத்த *கிரைசோபெர்லா* இரைவிழுங்கி, *ஐசாரியா ஃபுமோசோரோசியா* பூஞ்சை ஆகிய உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளைப் பெருமளவில் உற்பத்தி செய்து **விவசாயிகளுக்கு வழங்குமாறு பெறப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில்,** புதிதாக 5 தென்னை ஒட்டுண்ணி உற்பத்தி மையங்கள் 3 கோடி ரூபாய் நிதியில் அமைக்கப்படும். கோயம்புத்தூர் மாவட்டம் ஆழியார் நகர், கண்ணம்பாளையம், தேனி மாவட்டம் வைகை அணை, விருதுநகர் மாவட்டம் தேவதானம் ஆகிய இடங்களில் புதிய *கிரைசோபெர்லா* உற்பத்தி மையங்களும், கன்னியாகுமரி மாவட்டம் புத்தளத்தில், *ஐசாரியா ஃபுமோசோரோசியா* உற்பத்தி மையமும் அமைக்கப்படும்.

iv. தரமான தென்னங்கன்றுகள் விவசாயிகளுக்குக் கிடைப்பதை உறுதி செய்ய கரூர் முதலைப்பட்டி அரசு தோட்டக்கலைப் பண்ணையில் 15 ஏக்கர் பரப்பளவில் **"புதிய தென்னை நாற்றுப்பண்ணை"** ரூபாய் 48 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

v. **தமிழ்நாடு தென்னைப் பதப்படுத்தும் கழகம்**

தென்னை விவசாயிகளின் வருமானத்தை நீடித்த நிலையான முறையில் பெருக்குவதற்கும், மதிப்புக் கூட்டுவதால் நீரா, தென்னை மற்றும் தென்னை சார்ந்த பொருட்களுக்கு இலாபகரமான விலை கிடைக்கச்செய்யவும், நிலையான சந்தை வாய்ப்பினை

உருவாக்கவும், **தென்னை விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையினை செயல்படுத்தும் விதமாகவும் "தமிழ்நாடு தென்னைப் பதப்படுத்தும் கழகம்" வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையால் 22 கோடியே 30 இலட்சம் ரூபாய் மாநில நிதி ஒதுக்கீட்டில் புதிதாக அமைக்கப்படும்**. இக்கழகத்தின் வாயிலாக, அறுவடைக்குப்பின் தேவைப்படும் கட்டமைப்பு வசதிகள், பதப்படுத்துதல், தரக்குறியீடு இடுதல், சிப்பம் கட்டுதல், ஏற்றுமதி ஆகியவை குறித்த ஆலோசனைகள் வழங்கப்படும். மேலும், விரிவான சேவைகளை வழங்க ஏதுவாக, தென்னை வளர்ச்சி வாரியம், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தோட்டக்கலைத் துறையுடன் ஒருங்கிணைந்து இக்கழகம் செயல்படும். **நடப்பாண்டில், இதற்கென 5 கோடியே 30 இலட்சம் ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

vi. கொப்பரை விலை வீழ்ச்சியினைத் தடுத்து விலையினை நிலைப்படுத்த, குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொப்பரை கொள்முதல் செய்வதற்கான **"விலை ஆதரவுத் திட்டம்"** உரிய நேரத்தில் அறிவிக்கை செய்யப்பட்டு செயல்படுத்தப்படும்.

**32. உயர் மதிப்பு கொண்ட பழப் பயிர்களின் சாகுபடியை ஊக்குவித்தல்**

புளூபெர்ரி, ரம்புட்டான், லிச்சி, டிராகன் பழம், அவகேடோ, கிவி, மங்குஸ்தான், பேசன் பழம், போன்ற உயர் மதிப்பு கொண்ட

பழங்களின் நுகர்வு பொதுமக்களிடையே அண்மைக் காலங்களில் அதிகரித்து வருகிறது.

இப்பழங்களை நமது விவசாயிகள் தனிப் பயிராகவும், ஊடுபயிராகவும் 930 ஏக்கரில் சாகுபடி செய்திட 1 கோடியே 87 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இவை தவிர, தாய்லாந்து இனிப்புப் புளியையும், K.L.D, HRMN–99 போன்ற குளிர்ப் பிரதேசமல்லாத பகுதிகளிலும் விளையக்கூடிய (Low–chill) ஆப்பிள் இரகங்களையும் தமிழ்நாட்டில் விவசாயிகளிடையே அறிமுகப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

## 33. மானாவாரி நிலங்களில் புளி சாகுபடி ஊக்குவிப்பு

தமிழ்நாட்டின் வறட்சி மற்றும் பாசன நீர்ப் பற்றாக்குறை அதிகம் காணப்படும் பகுதிகளான தருமபுரி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், தூத்துக்குடி, திண்டுக்கல், திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் நீடித்த மற்றும் நிலையான வருமானத்தை வழங்கக்கூடிய மாற்றுப் பயிர்களை ஊக்குவிப்பது அவசியமாகும்.

அந்த வகையில், ஆண்டுக்கு 500 முதல் 700 மில்லிமீட்டர் மழைப்பொழிவிலும் வறட்சியைத் தாங்கி வளரும் உயர்தர ஒட்டுரகப் புளிய மரப் பரப்பு விரிவாக்கத்திற்காக எக்டருக்கு ரூ.20,000/– வீதம் ஐந்து ஆண்டுகளில் 1,250 ஏக்கரில் ஒரு கோடி ரூபாயில் நிதியில் புளி சாகுபடி

ஊக்குவிக்கப்படும். **நடப்பாண்டில், 20 இலட்சம் ரூபாய் மாநில நிதியில் 250 ஏக்கரில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.**

**34. குன்னூர் பழவியல் நிலையத்தில் புதிய இரகங்கள் அறிமுகம்**

நூற்றாண்டு பழமையான குன்னூர் பழவியல் நிலையத்தில் ஆப்பிள், பிளம், பீச், பேரிக்காய், கிவி, வெண்ணெய்ப்பழம், பெர்சிமான் போன்ற பழ வகைகளின் புதிய இரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு மரபணுத் தொகுப்பு 75 இலட்சம் ரூபாய் நிதியில் உருவாக்கப்படும். இதன் வாயிலாக, குளிர்ப்பிரதேசப் பகுதிகளுக்குத் தேவையான இப்புதிய இரகங்களின் நடவுச்செடிகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

**35. காளான் உற்பத்திக்கூடங்கள் அமைத்தல்**

சிறிய இடத்தில், குறைந்த செலவில், அதிக வருமானம் தரக்கூடிய காளான் வளர்ப்பு முக்கிய சிறுதொழிலாகும். உடல் நலத்திற்குத் தேவையான புரதம், நார்ச்சத்து போன்ற முக்கிய ஊட்டச்சத்துகளையும், அசைவ உணவிற்கு இணையான சுவையையும் காளான் தருவதால் நாளுக்கு நாள் இதன் பயன்பாடும் தேவையும் அதிகரித்து வருகிறது.

தடையில்லாமல் நுகர்வோருக்குக் காளான் கிடைக்கப்பெறும் வகையில் காளான் வளர்ப்பினை ஊக்குவிக்க, கிராமப்புர இளைஞர்கள், பெண்களுக்கு 2026–27

**ஆம் ஆண்டில், 50 சிறிய அளவிலான காளான் உற்பத்திக் கூடங்கள் 50 இலட்சம் ரூபாய் நிதியில் அமைக்கப்படும்.**

**36. கிழங்கு வகை சுவைதாளிதப் பயிர்கள் (Spices and Condiments) பரப்பு விரிவாக்கம்**

***கமழ் மஞ்சள், முளை இஞ்சி*** என்று பட்டினப்பாலையில் பணப்பயிராகக் குறிப்பிடப்படும் மஞ்சளும், இஞ்சியும் பழந்தமிழரின் உணவில் சுவை ஊட்டியிருப்பதை அறிய முடிகிறது. இச்சிறப்பு வாய்ந்த மஞ்சள், இஞ்சியுடன் பூண்டும் கிழங்கு வகை சுவைதாளிதப் பயிராகத் தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படுகின்றது. இவற்றிற்கான தேவை உணவில் மட்டுமல்லாமல் மருத்துவத்திலும் பெரிய அளவில் இருப்பதால், உள்நாட்டு மற்றும் அயல்நாட்டுச் சந்தையில் பெரும் பங்களித்து விவசாயிகளின் வருமானத்தைக் கணிசமாக உயர்த்துகின்றன.

**எனவே, கிழங்குவகை சுவைதாளிதப் பயிர்களின் சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் 2026–27 ஆம் ஆண்டில், 2,500 ஏக்கரில் 4 கோடி ரூபாய் நிதியில் இவற்றின் பரப்பு விரிவாக்கம் மேற்கொள்ளப்படும்.**

**37. வெங்காய சேமிப்புக் கிடங்குகள் அமைத்தல்**

வெங்காயம் **பருவகாலப் பயிராக** இருப்பதால், ஆண்டு முழுவதும் நுகர்வோருக்கு அவை தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்வதற்காகப் போதுமான சேமிப்பு வசதிகளை உருவாக்குதல் இன்றியமையாததாகும். இது வெங்காயத்தின் விலை ஏற்றத்தாழ்வுகளைக் கட்டுப்படுத்தவும், விநியோகத்தில்

ஏற்படும் நிலையற்ற தன்மையைக் களையவும், திடீர் விலை உயர்வைத் தடுக்கவும் பெரிதும் உதவும்.

**எனவே, 2026–27 ஆம் ஆண்டில், 57,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட வெங்காய சேமிப்புக் கிடங்குகள் 22 கோடியே 80 இலட்சம் ரூபாய் நிதியில் அமைக்கப்படும்.**

**38. பழங்கள், காய்கறிகளின் பாரம்பரிய இரகங்களை ஊக்குவித்தல்**

பழங்கால மக்களின் உணவுப் பழக்கத்தை இந்தத் தலைமுறையினர் அறியச் செய்யவும், வீட்டுத்தோட்டங்களிலும் மலைப்பகுதிகளிலும் மட்டுமே சாகுபடிச் செய்யப்படும் பாரம்பரிய காய்கறிகள், பழ இரகங்களை மீட்டு பெரும்பான்மையாக சாகுபடி செய்வதை ஊக்குவிக்க வேண்டியது அவசியமாகிறது.

2026–27 ஆம் ஆண்டில், செங்கவருக்கை, வெட்டையன், சூரங்குடி வெட்டையன் போன்ற மா இரகங்கள், பண்ருட்டி பலா, முண்டன் சக்கை, செம்பருத்தி போன்ற பலா இரகங்கள், மட்டி, நமரன், சிறுமலை, விருப்பாச்சி, லாடன், உதிரன் போன்ற வாழை இரகங்கள் மற்றும் பாரம்பரிய காய்கறி இரகங்களை விவசாயிகள் சாகுபடி செய்வதை ஊக்குவிக்க 3 கோடியே 88 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**39. மருத்துவப்பயிர்கள் சாகுபடியை ஊக்குவித்தல்**

தமிழ்நாட்டில் பழங்காலம் முதலே மருத்துவப்பயிர்களின் பயன்பாடு மிகச்சிறப்பாக இருந்து வருகிறது. நவீன மருத்துவத் துறையில் மூலப்பொருளாக இப்பயிர்களின் தேவை தொடர்ந்து

அதிகரித்து வருவதால், காடுகளிலிருந்து சேகரிக்கும் முறையைத் தாண்டி, தற்போது அவை வணிக ரீதியாகவும் சாகுபடி செய்யப்படுகின்றன. மருத்துவப் பயிர்களின் சாகுபடியை மேலும் ஊக்குவிப்பதோடு, புற்றுநோய் செல்களை எதிர்ப்பதில் திறன்மிக்கதாகக் கருதப்படும் முள்சீத்தா சாகுபடியையும் பரவலாக்கும் நோக்கில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

2026-27 ஆம் ஆண்டில், **1,720 ஏக்கரில் ஒரு கோடியே 51 இலட்சம் ரூபாய்** நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**40. வேலூர் மாவட்ட அரசு தோட்டக்கலைப் பண்ணையில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்**

வேலூர் மாவட்டத்தில் 85 ஏக்கர் பரப்பளவில் செயல்பட்டு வரும் அகரம்சேரி அரசு தோட்டக்கலைப் பண்ணையில், ஆண்டு தோறும் சுமார் 35 இலட்சம் நடவுச் செடிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் குழித்தட்டு காய்கறி நாற்றுகள், பழச்செடிகள், மரக்கன்றுகள், அழகுச் செடிகள் ஆகியவை பல்வேறு அரசு திட்டங்களின் கீழும் நேரடி விற்பனையிலும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த அரசு தோட்டக்கலைப் பண்ணையின் செயல் திறனை மேலும் மேம்படுத்தும் நோக்கில், புதிய கட்டமைப்பு வசதிகள் 2 கோடியே 3 இலட்சம் ரூபாய் நிதியில் அமைக்கப்படும்.

**41. திருவள்ளூர் மாவட்டம் புட்லூரில் மாபெரும் நடவுச்செடிப் பண்ணை அமைத்தல்**

திருவள்ளூர் மாவட்டம், புட்லூரில் 51 ஏக்கர் பரப்பளவில், தரமான அலங்காரச் செடிகள், பல்வேறு மரவகைக் கன்றுகளை உற்பத்தி செய்து அவை உடனுக்குடன் விவசாயிகள், பொதுமக்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் ஒரு பெரிய அளவிலான நாற்றுப்பண்ணை அமைக்கப்படும்.

இத்திட்டத்தினை ஐந்து ஆண்டு காலத்தில் 7 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. முதலாம் ஆண்டில் 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் பண்ணையில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

**42. வட்டார அளவில் தோட்டக்கலை விற்பனை நிலையங்கள் அமைத்தல்**

தமிழ்நாடு அரசின் 74 தோட்டக்கலைப் பண்ணைகளிலும் 24 பூங்காக்களிலும் உற்பத்தி செய்யப்படும் மண்புழு உரம், உயிரி கட்டுப்பாட்டுக் காரணிகள் உள்ளிட்ட இயற்கை இடுபொருட்கள், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள், நடவுச் செடிகள், தோட்டக்கலைக் கருவிகள், பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் பழங்கள், காய்கறிகள், சுவை தாளிதப் பொருட்கள் போன்றவை வட்டாரங்களில் உள்ள ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்களில் நியாயமான விலையில் பொதுமக்களுக்குக் கிடைக்கும் வகையில் 100 தோட்டக்கலை விற்பனை நிலையங்கள் 5 கோடி ரூபாய் நிதியில் அமைக்கப்படும்.

**43. நகர்ப்புரங்களை எழிலூட்டுதல்**

அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், பொதுப் பயன்பாட்டு இடங்கள், வீடுகள் போன்றவற்றில் நில எழிலூட்டும் பணிகளுக்கான கோரிக்கைகளை எளிதாகப் பதிவு செய்யும் வகையில் தனித்துவமான இணைய தளம் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் (TANHODA) வாயிலாக உருவாக்கப்பட்டு, குறைந்த செலவில் வீட்டுத்தோட்டங்கள் அமைத்தல், புல் தரைகள் அமைத்தல், அலங்காரச்செடிகள், பூச்செடிகள் நடவு செய்தல் ஆகிய எழிலூட்டல் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இதற்கெனத் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் (TANHODA) நில எழிலூட்டல் பிரிவு வலுப்படுத்தப்பட்டு தமிழ்நாடு எங்கும் உள்ள நகர்ப்புரங்கள் அழகிய சுற்றுச்சூழலுக்கு உகந்த பசுமை வளாகங்களாக மாற்றப்படும்.

**வேளாண்மைப் பொறியியல் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

வேளாண் பணிகளை காலத்தே மேற்கொண்டால் மட்டுமே உரிய மகசூல் பெற இயலும். வேளாண் தொழிலாளர் பற்றாக்குறையினை எதிர்கொள்ள, வேளாண்மையில் இயந்திரமயமாக்கலை ஊக்குவிக்கவும், இயற்கை வளங்களான மண் மற்றும் நீரினைப் பாதுகாத்து செறிவூட்டுதல், வேளாண்மையில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாடு

ஆகியவற்றிற்கும் பல்வேறு திட்டங்களை வேளாண்மைப் பொறியியல் துறை செயல்படுத்திவருகிறது.

**44. தனிநபர் விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானியத்தில் வழங்குதல்**

வேளாண்மையில், கருவிகளின் பயன்பாடு குறித்து நாம் சங்க இலக்கியங்களின் வாயிலாக அறியலாம். அவற்றில் **முதன்மைக் கருவியான ஏரினை முன் வைத்தே, பின்னர் வந்த கம்பரும் வேளாண்மையின் சிறப்பைக் கூறும் தனது நூலுக்கு 'ஏரெழுபது' என்று பெயரிட்டதோடு,** உழவுக்கு உறுதுணையாகும் உறுப்புகளை, மேழி, ஊற்றாணி, நுகத்தடி, நுகத்துளை, நுகத்தாணி, பூட்டாங்கயிறு, தொடை, கொழு, கொழுவாணி, தாற்றுக்கோல், உழவெருது எனப் பட்டியலிட்டு அவை ஒவ்வொன்றின் சிறப்பினையும் தனித்தனியாகப் பாடியுள்ளார்.

கிராம அளவில் வேளாண் இயந்திரமயமாக்கலைப் பரவலாக்கும் நோக்கில், வேளாண் இயந்திரங்கள், கருவிகள், மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள், சூரியக் கூடார உலர்த்திகள் முதலியன மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. 2026–27 ஆம் ஆண்டில், 227 கோடியே 20 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில நிதி ஒதுக்கீட்டில் 24,000 விவசாயிகள் பயன்பெறும் வகையில் சுமார் 8,870 பவர் டில்லர்கள், 5,090 விசைக்களையெடுப்பான்கள், 1,400 சுழற்கலைப்பைகள், 855 டிராக்டர்கள் உள்ளிட்ட வேளாண் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வேளாண்

இயந்திரமயமாக்கல் திட்டம் செயல்படுத்தப்படும். இந்த ஆண்டு முதல், சூரியக் கூடார உலர்த்தி அமைக்க அதிகபட்ச மானியமாக இருந்த 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயினை உயர்த்தி 4 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயாக வழங்கப்படும். பெண் விவசாயிகளிடையே வேளாண் இயந்திரமயமாக்கலை ஊக்குவிப்பதற்காக, இத்திட்டத்தில் பெண் விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**45. வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைத்தல்**

விவசாயிகள் தங்களுக்குத் தேவையான வேளாண் இயந்திரங்கள், கருவிகள், பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்க உதவும் ட்ரோன்கள் போன்ற நவீன உபகரணங்களை எளிதில் வாடகைக்குப் பெற்று, வேளாண் பணிகளைக் குறித்த காலத்தில் மேற்கொள்ளவும், வருமானத்தை உயர்த்திடவும், 10 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்க 80 சதவீத மானிய அடிப்படையில் அதிகபட்சமாக 8 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. மொத்தமாக 50 கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்கள் 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும். மேலும், இந்த ஆண்டின் மொத்த ஒதுக்கீட்டில், 30 சதவீதம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

**46. "வெற்றி வான்மகள்" திட்டம்**

இந்தியாவில் ட்ரோன் தொழில்நுட்பம் விவசாயம், கட்டுமானம், சரக்குப் போக்குவரத்து, கண்காணிப்பு, பேரிடர்

மேலாண்மை ஆகிய துறைகளில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி வருகிறது. **ஐக்கிய நாடுகள் சபை 2026–ஆம் ஆண்டினை "சர்வதேச பெண் விவசாயிகள் ஆண்டாக" அறிவித்துள்ள நிலையில்,** பெண்களை ட்ரோன் இயக்குபவர்களாக மாற்றுவதன் வாயிலாக வேளாண்மையில் உரம், பூச்சிக்கொல்லி தெளித்தல், பயிர்க் கண்காணிப்பு உள்ளிட்ட பணிகள் எளிதாக்கப்படுவதுடன், வேளாண் பணிகளில் ஆள்பற்றாக்குறையை எதிர்கொள்ள வாய்ப்பாகவும் அமையும். இதற்காக, தகுதியுள்ள **100** மகளிர் உள்ளிட்ட 500 நபர்களுக்கு மாநில அரசு செலவில் ட்ரோன் இயக்குபவர் பயிற்சி மற்றும் இயக்குபவர் உரிமம் (**Drone Pilot License**) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தொலைநிலை விமானப் பயிற்சி நிறுவனத்தின் வாயிலாக ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். பயிற்சி பெற்ற **50** மகளிருக்கு ட்ரோன்கள் 50 சதவீத மானியத்தில், 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மாநில நிதியிலிருந்து வழங்கப்படும். பெண்களைக் காக்க சிங்கப்பெண் படையை உருவாக்கிய நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விவசாயம் காக்க, வான்மகள் படையை உருவாக்க உள்ளார்.

### 47. பண்ணைக் குட்டைகள் உருவாக்குதலும் தூர்வாருதலும்

**"மழை இயற்கையின் வரம் என்றால் பாசனம் மனிதனின் முன்னேற்பாடு".** எனவேதான், **"நீராட்சித் திட்டத்தினைச்"** செயல்படுத்தி பாசன ஏரிகளைப் பராமரிக்கவும் புதிய பண்ணைக் குட்டைகள் அமைக்கவும் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. மழை நீரினை முறையாகச் சேமித்து பாசன நீர் ஆதாரத்தினை

மேம்படுத்த, 500 விவசாயிகளின் நிலங்களில் 100 சதவீத மானியத்தில் பண்ணைக் குட்டைகள் உருவாக்கவும், பண்ணைக் குட்டைகளின் மழைநீர் சேமிப்புத்திறனை மேம்படுத்துவதற்காக வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களைக் கொண்டு 75 சதவீத மானியத்தில் 500 பண்ணைக் குட்டைகளைத் தூர் வாருவதற்கும் 2026-27 ஆம் ஆண்டில், மொத்தம் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

**48. ஆயிரம் ஏக்கர் பாசனப் பரப்பை உருவாக்கிட நீர் ஆதாரங்களை ஏற்படுத்துதல்**

பாசனப் பரப்பினை அதிகரிக்க வேண்டும் என்ற தொலைநோக்குத் திட்டத்தின் அடிப்படையில் பாதுகாப்பான குறுவட்டங்களிலுள்ள நீர்ப்பாசன வசதியில்லாத பொதுப்பிரிவினைச் சார்ந்த விவசாயிகளின் நிலங்களில், ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள் அமைக்க சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கு 60 சதவீத மானிய அடிப்படையில் அதிகபட்சமாக ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயும், இதர விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபாயும் பின்னேற்பு மானியமாக வழங்கப்படும். மேலும் இத்திட்டம், நடைமுறையில் உள்ள தனித்து சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் திட்டம் மற்றும் நுண்ணீர்ப் பாசனத் திட்டங்களுடன் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தப்படும். இத்திட்டம் 500 விவசாயிகள் பயன்பெறும் வகையில் 6 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**49. சூரிய சக்தி பம்புசெட்டுகள் அமைக்கும் திட்டம்**

வேளாண்மையில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கும், விவசாயிகளுக்கு நிலையான நீர்ப்பாசன வசதிகளை உறுதி செய்வதற்கும், டீசல் பம்புசெட்டுக்கு மாற்றாக, மின்சார இணைப்பு இல்லாத பாசன நீர் ஆதாரங்களுக்கு மின் கட்டமைப்புடன் சாராத, தனித்து சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் 1,000 விவசாயிகளுக்கு மானிய உதவியுடன் அமைத்துத் தரப்படும். பாசனத்திற்காக விவசாயிகள் தொடர் செலவினம் மேற்கொள்வதைத் தவிர்க்க ஏதுவான, சுற்றுச்சூழலுக்கு உகந்த இத்திட்டத்திற்கென, 2026-27 ஆம் ஆண்டில், 23 கோடியே 6 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**50. பயிர் சாகுபடி மற்றும் மதிப்புக் கூட்டுதலுக்கான ஒருங்கிணைந்த வேளாண் இயந்திர வாடகை வணிக மையம்**

வேலையாட்கள் பற்றாக்குறை, விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்காமல் இருத்தல் போன்றவை தற்போது விவசாயிகள் முன் உள்ள முக்கிய சவால்களாகும். இவற்றை எதிர்கொள்ள, பயிர் சாகுபடி மற்றும் மதிப்புக் கூட்டுதலுக்கான வேளாண் இயந்திரங்களை வாடகை அடிப்படையில் விவசாயிகள் பயன்படுத்திட ஒருங்கிணைந்த **வேளாண் இயந்திர வாடகை வணிக மையங்கள் அமைப்பது அவசியம் என்ற தொலைநோக்குத் திட்டத்திற்குச் செயல்வடிவம் அளிக்கும் நோக்கில்,** நடப்பாண்டில், தலா 25 இலட்சம் ரூபாய் மதிப்பிலான

பயிர் சாகுபடி மற்றும் மதிப்புக் கூட்டுதலுக்கான 50 ஒருங்கிணைந்த வேளாண் இயந்திர வாடகை வணிக மையங்கள் அமைக்கப்படும். ஆதிதிராவிடர், பழங்குடியினர், பெண் தொழில் முனைவோர் மற்றும் வேளாண்மைப் பொறியியலில் பட்டயம் அல்லது பட்டப்படிப்புப் பெற்ற இளைஞர்களுக்கு 75 சதவீத மானியமும், இதர தொழில் முனைவோருக்கு 50 சதவீத மானியமும் வழங்கிட இத்திட்டத்திற்கு 8 கோடியே 13 இலட்சம் ரூபாய் மாநில நிதியிருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

**51. கடற்கரையோர தோட்டக்கலைத் திட்டம்**

**"கடற்கரை நமக்கு அருட்கொடை**
**மக்களுக்கு மகிழ்ச்சி தரும் அன்புக்கொடை"**

தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில், உவர் நீருக்கு மேலே இருக்கும் நன்னீரினைப் பயன்படுத்தி தோட்டக்கலைப் பயிர் சாகுபடியை ஊக்குவித்து **"நீலப் பசுமைத் தோட்டக்கலைப் பூங்காக்கள்" (Blue Green Horticulture Parks)** அமைத்திட, நடப்பாண்டில் நன்னீர் சேமிப்புக் கிணறுகள், ஒரு கிணற்றிற்கு அதிகபட்சமாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மானியத்தில், முன்னோடித் திட்டமாக 10 விவசாயிகளுக்கு வழங்கப்படும். மேலும், சூரிய சக்தி பம்புசெட்டுகளும் தெளிப்பு நீர்ப் பாசன அமைப்புகளும் தற்போதுள்ள திட்டங்களுடன் ஒருங்கிணைத்து அமைத்துக் கொடுக்கப்படும். இந்த நீர் ஆதாரத்தினைக் கொண்டு, 10 எக்டர் பரப்பளவில் மிளகாய் மற்றும் கொத்தமல்லிப் பயிர்கள் சாகுபடி ஊக்குவிக்கப்படும். இத்திட்டத்திற்கென

மொத்தம் 49 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**52. விவசாயிகளுக்கு மானியத்தில் கதிரடிக்கும் களம் அமைத்துக் கொடுத்தல்**

விவசாயிகள் தாங்கள் விளைவித்த நெல், நிலக்கடலை, கம்பு, மக்காச்சோளம், எள், உளுந்து உள்ளிட்ட பயிர்களின் தானியங்களைக் கதிரடித்துப் பிரித்தெடுத்து, அவற்றை உலர்த்தி சேமிக்கவும், அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புகளைக் குறைத்து உரிய விலைக்கு விற்றுப் பயன்பெறவும், தனிநபர் விவசாயிகளின் நிலங்களில் 100 கதிரடிக்கும் களங்கள் மொத்தம் 2 கோடியே 80 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் அமைத்துத் தரப்படும்.

**53. வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கும் சேவையை வலுப்படுத்துதல்**

i. வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை இ-வாடகை 2.0 சேவையின் வாயிலாக வாடகைக்கு வழங்கும் திட்டத்தினை வலுப்படுத்த, நடப்பாண்டில் 60 டிராக்டர்கள், அதற்குரிய இணைப்புக் கருவிகள், நெல் அறுவடை இயந்திரங்கள் உள்ளிட்ட 463 வேளாண் இயந்திரங்களும் கருவிகளும் 19 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

ii. மேலும், 5 வட்டாரங்களில் வேளாண் இயந்திரக் கூடாரங்கள் ஒரு கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

iii. டிராக்டரால் இயங்கக்கூடிய வரப்பு செதுக்கி சேறு பூசும் கருவியின் மூலம் நெல் வயல்களில் வரப்பு செதுக்கும் தொழில்நுட்பத்தைப் பரவலாக்க ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இந்த அனைத்து இனங்களையும் செயல்படுத்த 20 கோடியே 31 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**54. வேளாண் இயந்திரங்களைப் பழுது நீக்கிப் பராமரிக்கும் மையங்கள் அமைத்தல்**

வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தி பம்புசெட்டுகளின் பயன்பாடு அதிகரித்து வரும் நிலையில், அவற்றை உடனுக்குடன் பழுதுநீக்கிப் பராமரிக்கும் வசதிகள் கிராமப்புரங்களிலேயே கிடைத்திட, கிராமப்புர இளைஞர்கள், தொழில் முனைவோர்களின் வாயிலாக வேளாண் இயந்திரங்களையும் சூரிய சக்தி பம்புசெட்டுகளையும் பழுதுநீக்கிப் பராமரிக்கும் 15 மையங்கள், ஒரு கோடியே 12 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

**55. பயிர் சாகுபடியில் தொடக்கம் முதல் இறுதி வரை இயந்திரமயமாக்கம்**

உழவு தொடங்கி பயிர்க் கழிவு மேலாண்மை வரை அனைத்து வேளாண் பணிகளிலும் இயந்திரங்களைப்

பயன்படுத்தி முழுமையான இயந்திரமயமாக்குதலை மேற்கொள்வதன் வாயிலாக சாகுபடி செலவினத்தைக் குறைக்க இயலும். எனவே, 225 ஏக்கர் பரப்பளவிலான விவசாயிகளின் வயல்களில் மக்காச்சோளம், நிலக்கடலை, உளுந்து, தென்னை ஆகிய பயிர்களில் தொடக்கம் முதல் இறுதிவரை இயந்திரமயமாக்குதல் குறித்த கள செயல்விளக்கங்கள் வேளாண் தொழில்நுட்ப முனைவோர்களால் (Agri–Tech Entrepreneurs), 100 சதவீத மானியத்தில் 46 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**56. வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மற்றும் பயிற்சி மையங்கள் அமைத்தல்**

பயிர் சாகுபடிப் பணிகளிலும், அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மைப் பணிகளிலும், மேம்பட்ட தொழில்நுட்பங்களைப் பின்பற்றி, விவசாயிகள் அதிக மகசூல் பெறுவதற்கும், வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பரவலாக்கவும், திருக்கோவிலூர், காரைக்குடி, முசிறி, தாராபுரம், கும்பகோணம் ஆகிய இடங்களில் வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மற்றும் பயிற்சி மையங்கள் 4 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒன்றிய, மாநில அரசு நிதியில் அமைக்கப்படும்.

**57. நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகள் குறித்த மாபெரும் கண்காட்சி**

பல்வேறு பயிர்கள், வேளாண் பணிகளுக்கு ஏற்ற நவீன, புதுமையான வேளாண் இயந்திரங்கள், கருவிகள், உபகரணங்களின் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடப்பாண்டில், மாபெரும் கண்காட்சி தஞ்சாவூர் மாவட்டத்தில் நடத்தப்படும். இக்கண்காட்சி, விவசாயிகள், வேளாண் இயந்திர உற்பத்தியாளர்கள், துறை அலுவலர்கள் ஆகியோருக்கிடையே தொடர்பினை ஏற்படுத்தி, இயந்திரமயமாக்கப்பட்ட சாகுபடி நடைமுறைகளை விவசாயிகள் பெருமளவில் பின்பற்ற வழிவகுக்கும்.

**வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

உழவனின் கரங்கள் உதிர்க்கும் வியர்வையில் உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்களின் பயணம் பண்ணையில் தொடங்கி, பல்வேறு நிலைகளைக் கடந்து நுகர்வோரின் கைகளைச் சென்றடையும் வரையிலும், கடல் கடந்து ஏற்றுமதியாகி உலக அரங்கில் மிளிரும் வகையிலும் மதிப்புச் சங்கிலியினை ஏற்படுத்தி வலுப்படுத்திடவும், எளிதில் சந்தையை அணுகிடவும், சந்தை வாய்ப்புகளை அதிகரித்திடவும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை முக்கியப் பங்காற்றி வருகிறது.

இதன் அடிப்படையில் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும், மதிப்புக்கூட்டுதலைப் பரவலாக்கவும், சந்தை இணைப்புகளை வலுப்படுத்தி நிலையான மற்றும் முழுமையான வேளாண் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் **அரசின் தொலைநோக்குத் திட்டங்களுக்கான** முன்னெடுப்புகளை 2026–27 ஆம் ஆண்டில் செயல்படுத்த இத்துறை திட்டமிட்டுள்ளது. விவசாயிகள் நலனில் அக்கறை உடைய நம் முதலமைச்சரின் இத்திட்டங்களால், இந்த ஆட்சியில் வேளாண் வளர்ச்சியை யாரும் அணையிட்டுத் தடுக்க முடியாது.

**58. தமிழ்நாடு விவசாயிகளின் வருமான மேம்பாட்டு ஆணையம்**

**"உழவனின் உழைப்பிற்கு உன்னத விலை கிடைத்திட!**
**வளம் குன்றா வேளாண்மையால் மாநிலம் செழித்திட!"**

வேளாண் பெருங்குடி மக்களின் வருவாயை நீடித்த மற்றும் நிலையான முறையில் உயர்த்தி, அவர்களின் பொருளாதாரத் தற்சார்பினை உறுதி செய்யும் சீரிய நோக்கோடு **"தமிழ்நாடு விவசாயிகளின் வருமான மேம்பாட்டு ஆணையம்", 23 கோடி ரூபாய்** நிதி ஒதுக்கீட்டில் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு அமைக்கப்படும். இப்பணிகளை மேற்கொள்ள இவ்வாண்டு 5 கோடியே 20 இலட்சம் ரூபாய் மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

## 59. உயிர்ம வேளாண்பொருட்களைச் சந்தைப்படுத்த ஊக்குவித்தல்

அண்மைக்காலங்களில், உயிர்ம வேளாண் பொருட்களின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு அதிகரித்து வரும் நிலையில் சந்தை மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகளை அதிகரித்து வருமானத்தை உயர்த்திட உயிர்ம வேளாண் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள், விருப்பமுள்ள உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், வர்த்தகர்களுடன் இணைக்கப்படுவதோடு, உற்பத்தியாளர்–வர்த்தகர்கள் இணைப்பு, தேசிய, சர்வதேசக் கண்காட்சிகளில் பங்கேற்பு, சந்தைப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். நடப்பாண்டில், பாரம்பரிய நெல், மிளகாய், மிளகு, மஞ்சள் போன்ற உயிர்ம வேளாண் விளைபொருட்களைச் சந்தைப்படுத்த உரிய வசதிகள் ஏற்படுத்தப்படும். இதற்கென, வல்லுநர்களைக் கொண்ட தனிப்பிரிவு அமைக்கப்படும். இந்த ஐந்தாண்டுத் திட்டம் மொத்தம் 19 கோடி ரூபாய் மாநில நிதியில் செயல்படுத்தப்படும். 2026–27 ஆம் ஆண்டில் இதற்கென 3 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மேலும், உயிர்ம வேளாண்பொருட்களுக்கான சந்தை வாய்ப்புகளை அதிகரிப்பதற்கு உழவர் சந்தைகளில் வாரம் ஒரு நாள் உயிர்ம வேளாண் முறையில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு விளைபொருட்களை விற்பனை செய்ய உரிய வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

## 60. புதிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை உருவாக்குதல்

சிறு, குறு விவசாயிகளை ஒருங்கிணைத்து அவர்களின் விளைபொருட்களுக்கான சந்தை வாய்ப்புகளை மேம்படுத்தி வருமானத்தை அதிகரித்திடும் வகையில் புதிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்கப்படும். அவ்வாறு அமைக்கப்படும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் ஒவ்வொரு பங்குதாரருக்கும் சமபங்கு மானியமாக முதலாமாண்டு 2,000 ரூபாயும், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டுகளில் தலா 1,500 ரூபாயும் ஆக மொத்தம் 5,000 ரூபாய் வழங்கப்படும்.

இத்திட்டம் மொத்தம் 30 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். நடப்பாண்டில் இதற்காக 12 கோடி ரூபாய் மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

## 61. உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை வலுப்படுத்துதல்

தமிழ்நாட்டில் 1,686 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் பல்வேறு அமைப்புகளால் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையால் 397 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்கள் நிலையான வளர்ச்சியடையத் தேவையான பரிந்துரைகளை வழங்குவதற்காக **உழவர் உற்பத்தியாளர் நிறுவன மேலாண்மைப் பிரிவு (FPC Management Cell)** அமைக்கப்படும். இப்பிரிவால் தேர்ந்தெடுக்கப்படும் உழவர் உற்பத்தியாளர்

நிறுவனங்களுக்கு நிதி மற்றும் நிர்வாக அறிக்கைகளை **இணைய வழியில் (Online)** சமர்ப்பிக்கத் தேவைப்படும் செலவில் 10 ஆயிரம் ரூபாயும், தலைமைச் செயல் அலுவலர் ஊதியத்தில் **50 சதவீதத் தொகையாக அதிகபட்சம்** மாதம் ஒன்றுக்கு 12,500 ரூபாயும் வழங்கப்படும்.

மேலும், சிறந்த நடைமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், சந்தை இணைப்பு, மதிப்புக்கூட்டல் மற்றும் நிலையான வருவாய் ஈட்டுதல் குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படுவதோடு மண்டல அளவில் கண்காட்சிகளும் நடத்தப்படும். மேற்கண்ட அனைத்து இனங்களையும் செயல்படுத்த **5 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கப்படும்** .

## 62. வேளாண் வணிக வழிகாட்டு மையம் அமைத்தல் (Agri Business Guidance Bureau)

விவசாயிகளுக்கும், புதுமை படைக்கும் வேளாண் தொழில் முனைவோருக்கும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கும் நவீன தொழில்நுட்பத் தகவல்கள், கடன் இணைப்பு, மானிய உதவிகள், பயிர்க் காப்பீட்டு விழிப்புணர்வு, முதலீட்டுத் திட்டமிடல், விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் முதலியவை குறித்து வழிகாட்டுதல் வழங்கும் நோக்கில், சென்னையில் 50 இலட்சம் ரூபாய் மாநில நிதி ஒதுக்கீட்டில் **"வேளாண் வணிக வழிகாட்டு மையம்"** நிறுவப்படும்.

**63. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் 1000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு வசதிகள் ஏற்படுத்துதல்**

அறுவடைக் காலங்களில் விளைபொருட்களின் வரத்து அதிகரிக்கும் போதும் சந்தை விலை குறையும் போதும் விவசாயிகள் தங்களது விளைபொருட்களைச் சேமிப்புக் கிடங்குகளில் இருப்பு வைத்து, விலை உயரும் போது விற்பனை செய்ய ஏதுவாக அதிக வரத்துள்ள போளூர் (திருவண்ணாமலை), அம்மூர் (இராணிப்பேட்டை) ஆகிய இரு ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் தலா 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகள் **4 கோடியே 80 இலட்சம் ரூபாய்** ஒன்றிய, மாநில நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

**64. குளிர்பதனக் கிடங்கு வசதிகள் ஏற்படுத்துதல்**

காய்கறிகள், பழங்கள், பயறுவகைகள், புளி, மிளகாய் வற்றல், எலுமிச்சை போன்ற வேளாண் விளைபொருட்களின் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பினைக் குறைத்து, சேமிப்புக் காலத்தை நீட்டித்து, தரத்தைப் பாதுகாத்து, ஏற்றுமதி வாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கில் துறைமுகம் மற்றும் விமான சேவை முனையங்களுக்கு அருகில் உள்ள காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் தலா 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்குகள் **பொது– தனியார் கூட்டாண்மை (PPP)** முறையில் ஏற்படுத்தப்படும்.

**65. மத்திய மண்டலத்தில் உள்ள முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்கள் மற்றும் சிறப்பு வணிக வளாகங்களை மேம்படுத்துதல்**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், எம்.புதூரில் வாழைக்கும், பி.கே.அகரத்தில் வெங்காயத்திற்கும், திண்டுக்கல் மாவட்டம் கோபால்பட்டியில் புளிக்கும், வேடசந்தூரில் முருங்கைக்கும் உள்ள முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்கள், பெரம்பலூர் மாவட்டம் செட்டிகுளத்தில் உள்ள வெங்காய வணிக வளாகம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் ராஜேந்திரபுரத்தில் உள்ள தென்னை வணிக வளாகம் ஆகியவற்றின் செயல்திறனை மேம்படுத்தவும், மதிப்புக்கூட்டலை அதிகரிக்கவும் அவை இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை பதப்படுத்தும் நிலையங்களாகத் தரம் உயர்த்தப்படும். இம்மையங்களைப் பயன்படுத்தும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், தொழில்முனைவோர்கள், ஏற்றுமதியாளர்கள் உரிய இயந்திரங்களை நிறுவ 50 சதவீத மானியம் வழங்கப்படும். இதற்காக **3 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**66. போச்சம்பள்ளி முதன்மைப் பதப்படுத்தும் நிலையத்தில் ஏற்றுமதிக்கான கூடுதல் வசதிகள்**

தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மாம்பழம், மாதுளை, காய்கறிகள் போன்றவற்றின் ஏற்றுமதியை சீனா, தென்கொரியா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு விரிவுபடுத்திடும் நோக்கில், கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி முதன்மைப் பதப்படுத்தும் நிலையத்தில் வெப்பநீர் பதப்படுத்தும் இயந்திரம்,

தரம்பிரிப்புக் கூடம், குளிர்பதனக்கிடங்கு ஆகிய கூடுதல் வசதிகள், விவசாயிகள், பதப்படுத்துவோர் மற்றும் ஏற்றுமதியாளர்கள் பயன்பெறும் வகையில் **ஒரு கோடியே 94 இலட்சம் ரூபாய்** ஒன்றிய, மாநில நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

**67. உழவர் சந்தைகள் புனரமைப்பு**

தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் உழவர் சந்தைகளில் நடப்பாண்டில் 10 உழவர் சந்தைகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும், சென்னையில் உள்ள பல்லாவரம், ஆவடி உழவர் சந்தைகளை நவீன ஒருங்கிணைந்த உழவர் சந்தைகளாக மறுசீரமைக்கவும், பெரம்பலூர் மாவட்டத்தில் செயல்படாமல் உள்ள வேப்பந்தட்டை உழவர் சந்தையினை எளம்பலூருக்கு இடமாற்றம் செய்யவும், திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி–I உழவர் சந்தையினை மீள பழைய இடத்திற்கே இடமாற்றம் செய்து புதிய கட்டடம் அமைக்கவும் **20 கோடி ரூபாய் மாநில** நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**68. உழவர் சந்தைகளில் மின்னணு விலைப் பலகைகள்**

தமிழ்நாட்டில் உள்ள 194 உழவர் சந்தைகளில் விவசாயிகளால் விற்கப்படும் விளைபொருட்கள் மொத்த சந்தை விலையை விடக் கூடுதலாகவும், நுகர்வோருக்குச் சில்லரை விலையை விடக் குறைவாகவும் விலை கிடைத்திட ஏதுவாக, அங்கு விற்பனை செய்யப்படும் அனைத்து காய்கனிகளுக்கும் அன்றாடம் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இவ்வாறு நிர்ணயம் செய்யப்படும் விலையினை அனைவருக்கும்

வெளிப்படையாக அறிவித்திடும் வண்ணம், 59 உழவர் சந்தைகளில் மின்னணு விலைப் பலகைகள் **2 கோடியே 4 இலட்சம் ரூபாய் மாநில நிதி ஒதுக்கீட்டில்** அமைக்கப்படும்.

## 69. சந்தை இடையீட்டுத் திட்டம் – விலை நிலைப்படுத்துதல் நிதி (MIS–PSRF)

தக்காளி போன்ற எளிதில் அழுகக்கூடிய விளைபொருட்களின் விலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்க தமிழ்நாடு வேளாண்மை விற்பனை வாரியத்தின் மூலம் 4 **கோடியே 26 இலட்சம் ரூபாய்** மாநில நிதியுடன் "சந்தை இடையீட்டுத் திட்டம் – விலை நிலைப்படுத்துதல் நிதி" (**MIS–PSRF)** ஏற்படுத்தப்படும். இதன் மூலம், சந்தைகளில் தக்காளி, வெங்காயம் ஆகியவற்றின் விலையினை நிலைப்படுத்த முடியும்.

## 70. வேளாண் நுண்ணறிவு மற்றும் சந்தை மகத்துவ மையம் (Agricultural Intelligence and Market Excellence Centre)

நாட்டிலேயே வேளாண் சந்தைப்படுத்துதலில் முன்னணி மாநிலமாகத் திகழ்வது தமிழ்நாடு. இதற்காகச் செயல்பட்டு வரும் 285 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், 213 e–NAM சந்தைகள், 194 உழவர் சந்தைகள், 1,686 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் அனைத்துக் கட்டமைப்புகள் தொடர்பான தரவுகளை ஒருங்கிணைத்து, செயற்கை நுண்ணறிவு, முன்கணிப்புப் பகுப்பாய்வு, புவியியல் தகவல் முறைமை (GIS) தொழில் நுட்பங்களுடன் நிகழ்நேர சந்தை நுண்ணறிவு விபரங்களை வழங்க **"வேளாண் நுண்ணறிவு மற்றும் சந்தை**

**மகத்துவ மையம்" (AIMEC)** ஏற்படுத்தப்படும். நடப்பாண்டில் 4 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீட்டில் இம்மையம் அமைக்கப்படும்.

**விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

"இந்தப் பூமியில் இன்றளவும் உயிர்களும் தாவரங்களும் உள்ளதென்றால் அதற்குக் காரணம் விதைகள்தான். விதைகள், தாம் தோன்றும்போதே தமக்குத் தேவையான ஊட்டச்சத்துடனும் பாதுகாப்புக் கவச உறையுடனும் பிறக்கின்றன". பயிர் சாகுபடியின் அடித்தளமாக விளங்கும் இத்தகைய விதைகள், தரமானதாக இருப்பதை உறுதி செய்வதே விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையின் முதன்மைப் பணியாகும்.

**71. உயிர்ம விவசாயிகள், இயற்கை விவசாயிகளின் தரவுகளுக்கான ஒருங்கிணைந்த வலைதளம்**

தேசிய உயிர்ம உற்பத்தித் திட்டம், பங்களிப்பு உத்தரவாதத் திட்டம் (இந்தியா ஆர்கானிக்) மற்றும் பங்களிப்பு உத்தரவாதத் திட்டம் (இயற்கை வேளாண்மை) ஆகியத் திட்டங்களுக்கென தனித்தனி வலைதளங்களை ஒன்றிய அரசு பராமரித்து வருகிறது. இத்திட்டங்களில் பதிவு செய்யப்படும் விவசாயிகளின் விபரங்களை நுகர்வோர் மற்றும் வணிகர்கள் தெரிந்து கொள்ள இயலாத நிலையை மாற்றி உரிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தும் நோக்கில் மேற்கூறிய மூன்று

திட்டங்களின்கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்து விவசாயிகளின் தரவுகள் அடங்கிய ஒருங்கிணைந்த வலைதளம் **20 இலட்சம் ரூபாய்** மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

**72. விதைப் பரிசோதனை நிலையங்களுக்குத் தேசிய அங்கீகார வாரியத்தின் (NABL) அங்கீகாரம் பெறுதல்**

விதைகளின் தரத்தை உறுதி செய்து, பரிசோதனை முடிவுகளின் மீதான நம்பகத்தன்மையை மேம்படுத்தும் நோக்கில், நாகப்பட்டினம், தேனி, நாமக்கல், திருவள்ளூர், ஈரோடு, இராமநாதபுரம், திண்டுக்கல், கிருஷ்ணகிரி ஆகிய எட்டு விதைப் பரிசோதனை நிலையங்களுக்கு 40 இலட்சம் ரூபாய் செலவில் தேசிய அங்கீகார வாரியத்தின் (NABL) அங்கீகாரம் பெறப்படும்.

**73. விதைச் சான்றளிப்புத் துறையால் சான்றளிக்கப்படும் விதைகளுக்கு QR குறியீடு (QR Code) கொண்ட சான்றட்டைகள் வழங்குதல்**

விதைச் சான்றளிப்புத் துறையால் விவசாயிகளுக்கு QR குறியீடு சான்றட்டைகளுடன் கூடிய சான்று விதைகள் வழங்கப்படும். இதன் மூலமாக விதைகளின் உற்பத்தி முதல் விநியோகம் வரை முழுமையான கண்காணிப்பு (Seed Traceability) ஏற்படுத்தப்படும். **இத்திட்டம் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்**.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண் கல்வி, வேளாண் ஆராய்ச்சி, வேளாண் விரிவாக்கம் ஆகியவற்றை மேற்கொண்டு தமிழ்நாட்டில் வேளாண் வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் முக்கியத்தூணாக இருந்து வருகிறது.

**74. நீலகிரி மாவட்டம் உதகையில் வேளாண் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம் நிறுவுதல்**

குறிஞ்சி மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் தேயிலை, மலைத்தோட்டக் காய்கறிகள், நறுமணப்பயிர்கள், மலர்கள் ஆகியன பெருமளவில் பயிரிடப்பட்டு வருகின்றன. இருப்பினும், இப்பயிர்களில் தரமான விளைபொருட்களை விளைவித்து, அவற்றைச் சரியான முறையில் சந்தைப்படுத்துவதில் இடர்ப்பாடுகள் உள்ளன. எனவே, நீலகிரி மாவட்ட விவசாயிகளை ஊக்குவிக்கவும் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், நஞ்சில்லா வேளாண் முறைகளைப் பரவலாக்கவும், விளைபொருட்களுக்கு உகந்த சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தித்தரவும் அரசு திட்டமிட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக, நீலகிரி மாவட்டத்தில் தற்பொழுது செயல்பட்டு வரும் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், **10 கோடி ரூபாய்** மதிப்பீட்டில் புதிய வேளாண் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையமாகத் தரம் உயர்த்தப்படும். அரசின் தொலைநோக்குத் திட்டத்தின்படி, இம்மையத்தினை நிறுவுவதற்கு, முதற்கட்டமாக 5 கோடி ரூபாய் மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

### 75. தஞ்சை மாவட்டம் சாக்கோட்டையில் உயிர்ம வேளாண்மைப் பட்டயப் படிப்புக் கல்லூரி அமைத்தல்

தமிழ்நாடு அரசின் தொலைநோக்குத் திட்டத்தின்படி, தமிழ்நாட்டை இயற்கை வேளாண்மையில் முன்னணி மாநிலமாக மாற்றும் நோக்குடன் தஞ்சை மாவட்டம், கும்பகோணம் அருகிலுள்ள சாக்கோட்டையில், இயற்கை வேளாண் விஞ்ஞானி 'நம்மாழ்வார்' அவர்களின் பெயரில் ஒரு புதிய **"உயிர்ம வேளாண்மைப் பட்டயப் படிப்புக் கல்லூரி"** அமைக்க **15 கோடி ரூபாய் மாநில** நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன் முதற்கட்டமாக 2026–2027 ஆம் ஆண்டில், 5 கோடி ரூபாய் மாநில நிதி வழங்கப்படும்.

இக்கல்லூரியில் மாணவர்களுக்கு உயிர்ம வேளாண்மை தொடர்புடைய அனைத்துப் பாடங்களும் செயல்வழிக் கற்றலுடன் கற்பிக்கப்படுவதுடன் வேலை வாய்ப்புகள் குறித்த உரிய வழிகாட்டுதல்களும் வழங்கப்படும்.

### 76. ஏற்றுமதிக்கேற்ற தோட்டக்கலைப் பயிர்களுக்கான தொழில்நுட்ப மையங்களை நிறுவுதல்

தமிழ்நாட்டில் பயிரிடப்படும் ஏற்றுமதிக்கு உகந்த பயிர்களான மா, மஞ்சள், மிளகாய் முதலியவற்றில் நஞ்சற்ற சாகுபடி குறித்த விழிப்புணர்வை விவசாயிகளிடம் ஏற்படுத்தவும், இப்பயிர்களைச் சாகுபடி செய்யும் விவசாயிகளை உலகளாவிய ஏற்றுமதி சந்தையுடன் நேரடியாக இணைப்பதற்காகவும், பயிர் வாரியாக ஏற்றுமதிக்கான நவீன தொழில்நுட்ப மையங்கள் (Export Oriented Technology hubs) நிறுவப்படும். இம்மையங்கள்

வாயிலாக விவசாயிகளுக்குத் தேவையான உயர்தரப் பயிற்சிகள், முறையான வழிகாட்டுதல்கள், விரிவான தொழில்நுட்ப ஆதரவுகள் ஆகியவை வழங்கப்படும். இதன்படி, மா தொழில்நுட்ப மையம் கிருஷ்ணகிரி மாவட்டம் பையூரிலும், மிளகாய் தொழில்நுட்ப மையம் இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியிலும், மஞ்சள் தொழில் நுட்ப மையம் ஈரோடு மாவட்டம் பவானிசாகரிலும் புதிதாக நிறுவப்படும். இம்மையங்களை அமைப்பதற்கெனத் **தலா ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 6 கோடி ரூபாய்** மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தின் முதற்கட்டமாக, 1,000 விவசாயிகள் கண்டறியப்பட்டு, அவர்கள் சர்வதேச ஏற்றுமதி சந்தையுடன் நேரடியாக இணைக்கப்படுவார்கள்.

## 77. கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் மாணவ மாணவியருக்கு விடுதி வசதிகளை விரிவுபடுத்துதல்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஆண்டுதோறும் 2,400 முதல் 3,500 மாணவர்கள் வரை இளநிலை மற்றும் முதுநிலை வேளாண் கல்வி பயில சேர்க்கப்படுகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் கிராமப்புரங்களைச் சேர்ந்தவர்கள். அதிலும் குறிப்பாக மாணவிகளின் எண்ணிக்கை 70 விழுக்காட்டிற்கும் அதிகமாக இருக்கும் நிலையை அறிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாணவர்களுக்குத் தகுந்த கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய தங்குமிடங்களை உடனடியாக வழங்கி அவர்கள்

எவ்வித இடர்ப்பாடுமின்றிக் கல்வி கற்பதை உறுதி செய்ய அறிவுறுத்தினார்கள். அதனடிப்படையில், கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மாணவர் விடுதிகள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யப்படும். இதற்கென 5 கோடி ரூபாய் மாநில நிதியிலிருந்தும், 5 கோடி ரூபாய் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வருவாய் நிதி ஆதாரங்களிலிருந்தும் வழங்கப்படும்.

**78. கோழிக்கழிவிலிருந்து மண்வள மேம்பாட்டிற்கு உரம் தயாரித்தலுக்கான ஆராய்ச்சி**

தமிழ்நாடு, முட்டை மற்றும் கறிக்கோழி உற்பத்தியில் முதன்மை மாநிலமாக விளங்குகிறது. இதில் நாமக்கல், சேலம், கரூர், ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர் மாவட்டங்கள், முட்டைக் கோழி மற்றும் கறிக்கோழித் தொழிலின் மையமாக விளங்குகின்றன. தமிழ்நாட்டில் கோழிப் பண்ணைகளில் இருந்து நாளொன்றுக்கு 5,400 முதல் 6,700 மெட்ரிக் டன் வரையிலான கோழிக் கழிவு உற்பத்தியாகிறது. இக்கழிவுகள் எவ்வித பாதுகாப்பு முறைகளையும் கையாளாமல் ஆங்காங்கே கொட்டப்படுவதால் சுற்றுச்சூழல் மிகவும் பாதிப்படைகிறது.

இந்நிலையில், **பெருவாரியான விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று** தமிழ்நாட்டில் முக்கியமாக நாமக்கல், சேலம், கரூர் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் சேரும் கோழிக் கழிவுகளை உலர்த்தி, பொடியாக்கி, உர உருண்டைகளாகத் தயாரித்துப் பயன்படுத்தி மண் வளத்தை

மேம்படுத்தும் தொழில்நுட்பங்கள் குறித்த ஆராய்ச்சி மற்றும் செயல்விளக்கங்கள் சேலம் மாவட்டத்தில் உள்ள சந்தியூர் வேளாண்மை அறிவியல் நிலையம் வாயிலாக மேற்கொள்ளப்படும். இதற்காக ஒரு கோடி ரூபாய் மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

**79. கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்குப் புதிய பேருந்துகள் வழங்குதல்**

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 14 இளநிலை பட்டப்படிப்புகள் வழங்கப்படுகின்றன. கோவையிலுள்ள பல்கலைக்கழக வளாகத்தில் மட்டும் 3,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக, மாணவர்கள் விவசாயிகளின் வயல்கள், கூட்டுறவு வங்கிகள், வேளாண் சந்தைகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு வேளாண் காலநிலை மண்டலங்களுக்குக் களப்பயணம் மேற்கொண்டு செயல்வழிக் கற்றலைப் பெறுகின்றனர்.

மாணவர்கள் இத்தகைய களப்பயணங்களைப் பாதுகாப்பாகவும், சிரமமின்றியும் மேற்கொள்ளத் தேவையான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு 6 புதிய பேருந்துகள் வாங்க, ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் மாநில நிதியிலிருந்தும் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் தமிழ்நாடு

வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வருவாய் நிதியிலிருந்தும் வழங்கப்படும்.

**தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம்** (TNAPEx)

**80. கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உணவு பதப்படுத்தும் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கான உயர்திறன் மையம் அமைத்தல்**

கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் TNAPEx மூலம் 2 கோடியே 62 இலட்சம் மதிப்பீட்டில் உணவு பதப்படுத்தும் தொழில்நுட்ப மேம்பாட்டு மையம் நிறுவப்படும். இம்மையம் புத்தாக்கம், மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் உருவாக்கம், பகுப்பாய்வு மற்றும் தொழில்நுட்ப ஆதரவு மூலம் உணவு பதப்படுத்துதல் சூழலை வலுப்படுத்தும். இதனால் தமிழ்நாட்டிலுள்ள உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களும் மற்றும் சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களும் பயன்பெறும்.

**81. வணிக முத்திரை, சிப்பமிடுதல், சந்தைப்படுத்துதல், விநியோகத் தொடர் மேம்பாடு, புதிய உணவுப் பொருள் தயாரிப்பு மேம்பாட்டு சேவைகளை வழங்குதல்.**

உணவு பதப்படுத்துதல் மேற்கொள்ளும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை மேம்படுத்தும் நோக்கில் வணிக முத்திரை பெறுதல், சிப்பமிடுதல், சந்தைப்படுத்துதல்,

விநியோகத் தொடர் மேம்பாடு, புதிய உணவுப் பொருள் தயாரிப்பு மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு சேவைகள் TNAPEx வாயிலாக வழங்கப்படும். இத்திட்டம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வண்ணம் செயல்படுத்தப்படும். இதற்கென மொத்தம் 8 கோடியே 61 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 82. உணவு பதப்படுத்தும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான ஆதரவு

உணவு பதப்படுத்தும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இணைய வணிகம்(e–Commerce) மற்றும் விரைவு–இணைய வணிகத்(Quick–Commerce) தளங்களில் இணைவதை ஊக்குவிக்க சந்தை இணைப்பு, வணிக முத்திரை மேம்பாடு, தள ஒருங்கிணைப்பு ஆகியவற்றுக்கான ஆதரவும், 100 உணவு பதப்படுத்தும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் தொழில் முனைவோருக்கு ஏற்றுமதித் தயார்நிலைப் பயிற்சி, சர்வதேச *ஒழுங்குமுறை இணக்கம்* மற்றும் தரச்சான்றிதழ் ஆகியவையும் சுமார் 2 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். மேலும், மிளகாய், முருங்கை, மாம்பழம், தேங்காய், வாழை, தக்காளி, இறால் போன்ற முக்கிய வேளாண் மற்றும் ஏற்றுமதி சார்ந்த பொருட்களுக்கான தடம் அறிதல் (Traceability) சேவைகளும் வழங்கப்படும். இதனால், வேளாண் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட உணவுப் பொருட்களுக்கு உலகளாவிய சந்தை வாய்ப்புகள் அதிகரிக்கப்படும்.

**83. திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரில் TNAPEx–ன் மண்டல மையங்கள் உருவாக்குதல்.**

தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகத்தின் மண்டல அளவிலான சேவைகள் மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில், விவசாயிகள், விவசாய உற்பத்தியாளர் நிறுவனங்கள், ஏற்றுமதியாளர்கள், தொழில்முனைவோர் மற்றும் உணவு பதப்படுத்தும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான ஆதரவுகளை வழங்க **திருச்சிராப்பள்ளியிலும் கோயம்புத்தூரிலும் மண்டல மையங்கள் 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்** உருவாக்கப்படும்.

**84. கூட்டுறவு, உணவு, நுகர்வோர் பாதுகாப்பு**

**I. கூட்டுறவு**

i. தமிழ்நாட்டில் பயிர் சாகுபடிக்கான குறுகிய கால வேளாண் கடன் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு 2026–2027–ஆம் ஆண்டில் 17 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்குப் பயிர்க்கடன் வழங்கப்படும்.

ii. கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு உள்ளிட்ட வேளாண் சார்ந்த நடவடிக்கைகளுக்கான உழவர்களின் குறுகிய காலக் கடன் தேவைகளுக்கு 2026–2027–ஆம் ஆண்டில் 3 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு மூலதனக் கடன் வழங்கப்படும்.

iii. விவசாய நிலமற்ற பட்டியல் இனத்தவருக்கு வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் வாங்க

மற்றும் பராமரித்திட, கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயம் சார்ந்த மத்தியக் காலக் கடன்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு மூலதனக் கடன்கள் வழங்கப்படும்.

iv. 2026–2027–ஆம் நிதியாண்டில் 15.07.2026 வரை 12,752 விவசாயிகளுக்கு 159 கோடியே 41 இலட்சம் ரூபாய் அளவிற்குப் பயிர்க்கடனும், 19,324 நபர்களுக்கு 140 கோடியே 91 இலட்சம் ரூபாய் அளவிற்கு கால்நடை பராமரிப்புக் கடனும் வழங்கப்பட்டுள்ளன.

v. 2026 ஆம் ஆண்டு பயிர்க்கடன் தள்ளுபடிக்குத் தகுதியான விவசாயிகளுக்கு வழங்க ஏதுவாக அரசால் முதல் தவணையாக 100 கோடி ரூபாய், இரண்டாம் தவணையாக 3,000 கோடி ரூபாய், மூன்றாம் தவணையாக 1,820 கோடி ரூபாய், நான்காம் தவணையாக 347 கோடி ரூபாய் என மொத்தம் 5,267 கோடி ரூபாய் முழுவதுமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

**II. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்**

**நெல் கொள்முதல் ஊக்கத்தொகை**

விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யப்படும் நெல்லிற்கு, தமிழ்நாடு அரசால் சன்ன இரகத்திற்கு மெட்ரிக் டன் ஒன்றுக்கு 1,560 ரூபாயும், பொது இரகத்திற்கு மெட்ரிக் டன் ஒன்றுக்கு 1,310 ரூபாயும் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. நடப்புக் கொள்முதல் பருவம் கே.எம்.எஸ்

2025–2026 இல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால், 29.07.2026 வரை, ஆறு இலட்சத்து 14 ஆயிரத்து 580 விவசாயிகளிடமிருந்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலமாக, மொத்தம் 62 இலட்சத்து 72 ஆயிரத்து 720 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 917 கோடி ரூபாய் ஊக்கத்தொகை நேரடியாக விவசாயிகள் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

**85. நீர்வளத்துறை**

பாசனம் மற்றும் குடிநீர்த் தேவைகளுக்கு இன்றியமையாத ஆதாரமான மழை நீரை அணைக்கட்டுகள் மற்றும் ஏரிகளில் சேமித்து வைத்துத் திறம்படப் பகிர்ந்தளிப்பது நீர்வளத்துறையின் முக்கியமான குறிக்கோளாகும்.

அணைகளிலிருந்து பாசனத்திற்குத் திறந்துவிடப்படும் நீர், தங்கு தடையின்றிக் கடைமடைப் பகுதி வரை விரைந்து செல்ல ஏதுவாக, 2026–2027–ஆம் ஆண்டில், 125 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆறுகள், வாய்க்கால்கள், கால்வாய்கள் மற்றும் வடிகால்களில் 5,955 கி.மீ நீளத்திற்கு 1,161 தூர்வாரும் பணிகள் நீர்வளத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால், மாநிலத்தின் நெல் மற்றும் இதர பயிர் வகைகளின் சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்திக்கான இலக்குகளை அடைவதோடு விவசாயிகளின் வருமானத்தையும் அதிகரிக்க இயலும்.

**86. கால்நடை பராமரிப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்துப் பாதுகாப்பு, நிலையான வாழ்வாதாரம் ஆகியவற்றில் முக்கியப் பங்களிப்பை அளித்து, கிராமப்புரப் பொருளாதாரத்தின் சிறப்பு அங்கமாக, குறிப்பாகப் பெண்களின் முன்னேற்றத்தினை உறுதி செய்வதில் கால்நடை பராமரிப்புத் துறை முக்கியப் பங்காற்றுகிறது.

**i. எருமை இனப்பெருக்கத் திறனை மேம்படுத்துதல்**

1,000 எருமை கிடேரிக் கன்றுகளுக்கும், சினையாக உள்ள 1,000 எருமைகளுக்கும் ஊட்டச்சத்து ஆதரவு வழங்க, மொத்தம் 2 கோடியே 4 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**ii. தமிழ்நாட்டின் பாரம்பரியக் கால்நடைகளின் மறுமலர்ச்சி**

தமிழ்நாட்டில் 1 இலட்சத்து 52 ஆயிரம் காங்கேயம், 14 ஆயிரம் புலிக்குளம், 42 ஆயிரம் உம்பளச்சேரி, 55 ஆயிரம் பர்கூர், 20 ஆயிரம் தோடா எருமைகள் என, பாரம்பரியக் கால்நடை இனங்கள் தனிநபர்களிடம் உள்ளன. அவற்றில், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குச் சொந்தமான 5,000 உள்நாட்டுக் கால்நடைகளுக்கு, தலா 5,000 ரூபாய் வீதம் கால்நடை பராமரிப்பு உதவித்தொகை வழங்கப்படும். இத்திட்டத்திற்கென 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். மேலும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தங்களது கால்நடை சார்ந்த

தயாரிப்புகளை விவசாயிகளுக்கு நியாயமான விலையில் விற்பனை செய்ய ஏதுவாக, தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் போன்ற அரசு முகமைகளுடன் உரிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**87. பால் வளம்**

தமிழ்நாட்டில் நாளொன்றுக்கு சுமார் 3 கோடி லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுவதன் மூலம், இந்தியாவின் மொத்த பால் உற்பத்தியில் சுமார் 4.7 சதவீத பங்களிப்பை வழங்குகிறது. மேலும், மாநிலத்தின் தனிநபர் தினசரி பால் கிடைப்பளவு 407 கிராம் என உள்ளதால், ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்வதில் பால்வளத்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது.

i. **500 நடுத்தர அளவிலான பால் பண்ணைகள் அமைத்தல்**

குறு மற்றும் சிறு பால் உற்பத்தியாளர்களிடையே பால் பண்ணைத் தொழில் முனைவை ஊக்குவித்து, நிலையான வருவாயை உறுதி செய்யும் நோக்கில், தலா 5 கால்நடைகள் (3+2 மாதிரி) கொண்ட 500 நடுத்தர அளவிலான பால் பண்ணைகள் அமைக்கும் இத்திட்டத்தின் கீழ், திட்டச் செலவில் 25 சதவீதம் மூலதன மானியமாக வழங்கப்படும். மீதமுள்ள திட்டச் செலவிற்கு குறைந்த வட்டியில் நிறுவனக் கடனுதவி பெறுவதற்கு வழிவகை செய்யப்படும். இம்முயற்சியினால் பால் உற்பத்தி அதிகரிக்கப்படுவதோடு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டு, குறிப்பாக மகளிர் பால் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரம்

மேம்படுத்தப்படும். இத்திட்டத்திற்குத் தேவையான மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

ii. **சிறு பால் பண்ணைகள் (Mini Dairies)**

பால் உற்பத்தியாளர்களுக்கு ஆண்டு முழுவதும் நிலையான வருமானம் கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கில், மாநிலம் முழுவதும் 5,000 சிறிய பால் பண்ணை அலகுகளை நிறுவுவதற்காக 4 சதவீத வட்டி மானியம் வழங்கப்படுகிறது. இந்த **சிறு பால் பண்ணைகள்** திட்டத்தில் தகுதியுள்ள பால் உற்பத்தியாளர்களுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்குவதை உறுதி செய்யும் வகையில், 2026–2027 ஆம் ஆண்டில் 4 கோடியே 19 இலட்சம் ரூபாய் நிதியில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

iii. **கால்நடைத் தீவனத்தை மானிய விலையில் வழங்குதல்**

பால் உற்பத்திச் செலவைக் குறைத்து, பொருளாதாரத்தில் நலிவடைந்த பால் உற்பத்தியாளர்களுக்கு ஆதரவளிக்கும் நோக்கில், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள தகுதியுள்ள பால் உற்பத்தியாளர்களுக்குத் தரமான சமச்சீர் கால்நடைத் தீவனம் கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய் மானியத்தில் ஒரு கால்நடைக்கு 3 கிலோ வீதம் 300 நாட்களுக்கு வழங்கப்படும். இத்திட்டம் அறிவியல் சார்ந்த தீவன மேலாண்மை முறைகளை ஊக்குவித்து, பால் உற்பத்தித் திறனை உயர்த்துவதுடன், பால் உற்பத்தியாளர்களின் வருவாயையும் மேம்படுத்தும். இத்திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

iv. **மானிய விலையில் தாது உப்புக் கலவை வழங்குதல்**

ஆரோக்கியமான கிடேரிக் கன்றுகள் எதிர்காலப் பால் உற்பத்திக்கான அடித்தளமாகும். கறவை மாடுகளின் வளர்ச்சி, இனப்பெருக்கத் திறன் மற்றும் வாழ்நாள் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நோக்கில், 50,000 கிடேரிக் கன்றுகளுக்கு 50 சதவீத மானியத்தில் தாது உப்புக்கலவை ஓராண்டிற்கு வழங்கப்படும். இத்திட்டத்திற்காக 2 கோடியே 76 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**88. மீன்வளம் மற்றும் மீனவர் நலன்**

தமிழ்நாட்டின் கிராமப்புரப் பொருளாதாரத்தில் உள்நாட்டு மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு முக்கியமான தூண்களாக உருவெடுத்துள்ளன. இத்துறை உள்நாட்டு மீனவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும் உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்புக்கும் வேலைவாய்ப்பினை உறுதி செய்வதிலும் முக்கியப் பங்காற்றுகிறது. மாநிலத்தில் சுமார் 3 கோடியே 85 இலட்சம் எக்டர் பரப்பளவில் உள்நாட்டு நீர்வளங்கள் அமையப் பெற்றுள்ளன. இந்த உள்நாட்டு மீன்வளமானது மீன்வள மேம்பாட்டிற்கும், ஆயிரக்கணக்கான கிராமப்புரக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது.

i. **கிராமப்புரங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறைக் கட்டுப்பாட்டிலுள்ள நீர்நிலைகளில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல்**

தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் கட்டுப்பாட்டில் 21,608 குளங்கள் உள்ளன. உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிக்கவும், ஊராட்சித்துறை நீர்நிலைகளில் மீன் உற்பத்தியை அதிகரிக்கவும், ஒரு எக்டருக்கு 2,000 என்ற எண்ணிக்கையில் தரமான மீன்குஞ்சுகள் 5,000 எக்டர் பரப்பளவில் 75 இலட்சம் ரூபாய் செலவில் இருப்பு செய்யப்படும். இதன் மூலம் கிராமப்புர மக்களுக்கு உயர்தரப் புரதசத்து நிறைந்த உணவு மலிவான விலையில் கிடைக்கும்.

ii. **தமிழ்நாட்டில் பல்நோக்குப் பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பை ஊக்குவித்தல்**

பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பை மேற்கொள்ள மீன்வளர்ப்போரை ஊக்குவிக்கும் வகையில், 200 பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பு மேற்கொள்ள, மீன் குஞ்சுகள், தீவனம் போன்ற இடுபொருட்களை வாங்குவதற்குத் தேவையான மானியம் மீன்வளர்ப்போருக்கு வழங்கப்படும். இது மீன்வளர்ப்போரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதுடன், கிராமப்புர மக்களுக்குப் புரதச்சத்து நிறைந்த உணவு கிடைப்பதையும் உறுதி செய்யும். இத்திட்டம் 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

## 89. ஊரக வளர்ச்சி

### I. கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதாரத் திட்டம்

கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதாரத் திட்டம்– தமிழ்நாடு திட்டத்தில் இயற்கை வள மேலாண்மை மற்றும் நீர் பாதுகாப்புப் பணிகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றன. இவை தவிர, நிலத்தடி நீர் மற்றும் மண்ணின் ஈரப்பதத்தை மேம்படுத்தத் தேவையான வறட்சித் தடுப்பு, நில மேம்பாடு, வரத்து மற்றும் பாசனக் கால்வாய்களைத் தூர்வாருதல், பாரம்பரிய நீர்நிலைகளைப் புதுப்பித்தல் போன்ற விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

ஊரகப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கும் சந்தைகளுக்கும் இடையே இணைப்பை உறுதி செய்வதற்கும், வேளாண் விளைபொருட்களின் போக்குவரத்தை எளிதாக்குவதற்கும், இணைக்கப்படாத ஆதிதிராவிட, பழங்குடியினக் குடியிருப்புகள் மற்றும் மலைப்பகுதிகளுக்கு ஓரடுக்கு கப்பிச்சாலை வசதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. 2026–2027 ஆம் ஆண்டில், பண்ணைக் குட்டைகள், புதிய குளங்கள், கசிவு நீர்க் குட்டைகள், நீர் செறிவூட்டுக் குழிகள், நீர் செறிவூட்டுத் தண்டுகள், செறிவூட்டுக் கிணறுகள், நாற்றங்கால், மரக்கன்று நடுதல், மண் வரப்பு, கல் வரப்பு போன்ற 12 ஆயிரம் பணிகள் 1,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

## II. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த சுய உதவிக் குழுப் பெண்களுக்கு வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், கால்நடை பராமரிப்பு மற்றும் வேளாண் காடு வளர்ப்பு போன்ற பிரிவுகளில் பல்வேறு நவீன தொழில்நுட்பங்கள் குறித்துப் பயிற்சியளித்து, அத்தொழில்நுட்பங்களை அவர்களின் பண்ணைகளில் பின்பற்றி ஆண்டு முழுவதும் நிலையான வருமானம் ஈட்டும் வகையில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு பண்ணை வாழ்வாதாரத் திட்டங்களை மேற்கொண்டுவருகிறது.

### i. மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் பயறு விதை உற்பத்தி

தரமான பயறு விதைகள் உற்பத்திக்காக, மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் 100 பயறு விதை உற்பத்தித் தொகுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தொகுப்புகளை வலுப்படுத்தி, பயறு வகைப் பயிர்களில் விதை இருப்பினை அதிகரித்திடும் வகையில், 2026–27 ஆம் ஆண்டில் மேலும் 50 பயறு விதை உற்பத்தித் தொகுப்புகள் ஒரு கோடி ரூபாய் நிதியில் அமைக்கப்படும். இந்த 150 பயறு விதை உற்பத்தித் தொகுப்புகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பயறு விதைகள் வேளாண்மைத் துறையினால் கொள்முதல்

செய்யப்பட்டு, வேளாண் பெருமக்களுக்குப் பல்வேறு திட்டங்களின் கீழ் விநியோகிக்கப்படும்.

**ii. விவசாயிகளுக்குத் தரமான தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து வழங்குதல்**

2024-25 ஆம் ஆண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் 60 தென்னை நாற்றுப் பண்ணைகள் அமைக்கப்பட்டு, தரமான தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, 2025-26 ஆம் ஆண்டில் தோட்டக்கலைத் துறை மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டன. நடப்பாண்டில் கூடுதலாக 2 இலட்சத்து 50 ஆயிரம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, தோட்டக்கலைத்துறை மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**iii. இயற்கைப் பண்ணையத் தொகுப்புகள் உருவாக்கம்**

விளைநிலத்தினை வளமாக்கி, எந்தவொரு இரசாயனப் பயன்பாடுமின்றி, ஆரோக்கியமான உணவை உற்பத்தி செய்திடும் வகையில், 2026-27 ஆம் ஆண்டில் கூடுதலாக ஆறு இயற்கைப் பண்ணையத் தொகுப்புகள் 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பில் ஆறு மாவட்டங்களில் அமைக்கப்படும். இத்தொகுப்புகள் மூலம் இயற்கைப் பண்ணையத்தில் உயிரி இடுபொருட்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பல்வேறு பாரம்பரிய

நடைமுறைகள் பற்றி விவசாயிகள் தெரிந்து கொண்டு பின்பற்ற இயலும்.

## 90. வனத்துறை

2026-27 ஆம் ஆண்டில், 'பசுமைத் தமிழ்நாடு இயக்கம்' (Green Tamil Nadu Mission) மூலம், மாநிலம் முழுவதும் உள்ள விளைநிலங்களில் வேளாண் காடுகளை ஊக்குவிக்கவும், வேளாண் வருவாயைப் பன்முகப்படுத்தவும் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்தவும் 5 இலட்சம் சந்தன மரக்கன்றுகள், 51 ஆயிரம் தேக்கு மரக்கன்றுகள் மற்றும் 20 இலட்சம் பல்வேறு வகையான மரக்கன்றுகள் நடப்பட உள்ளன. மேலும், நிலையான வேளாண் காடுகளை ஊக்குவிக்கவும், வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் சூழலியல் ரீதியான மீள்திறனை வலுப்படுத்தவும், கிழக்குத் தொடர்ச்சி மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் உள்ள பழங்குடியினரின் வேளாண் நிலங்களில் 10 இலட்சம் சில்வர் ஓக் மரக்கன்றுகளை நடவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மொத்தத்தில், 2026-2027 ஆம் ஆண்டில், தமிழ்நாடு முழுவதும் 'பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின்' கீழ் வேளாண்காடுகள் மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக 35 இலட்சத்து 51 ஆயிரம் மரக்கன்றுகள் நடவு செய்யப்படும்.

## 91. எரிசக்தி

வேளாண்மைக்கான பாசன நீரினை அளித்து பயிரைக் காப்பதில் எரிசக்தித் துறையின் பங்கு இன்றியமையாதது. மாநிலத்தின் விவசாய உற்பத்தியினைப் பெருக்கி, விவசாயிகளின் நலனை மேம்படுத்தும் நோக்குடன் 23 இலட்சத்து 97 ஆயிரத்து 732 வேளாண்மை மின் இணைப்புகளுக்கு இலவச மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு, விவசாயிகள் பயன்படுத்தி வருகிறார்கள்.

## 92. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை

### I. பேரிடர் மேலாண்மை

தேசிய பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து ஊக்க உதவித்திட்டத்தின் கீழ் பல்வேறு வறட்சித் தணிப்புத் திட்டங்கள் 111 கோடி ரூபாய் செலவில் விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில், 28 வட்டாரங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 75 கிராமங்களில் செயல்படுத்த ஒன்றிய அரசு முதல் தவணையாக 50 கோடி ரூபாய் நிதியும் தமிழ்நாடு அரசு தனது பங்குத் தொகையாக 5 கோடி ரூபாய் நிதியும் வழங்கியுள்ளன.

### II. நில அளவை மற்றும் நிலவரித் திட்டம்

#### i. பட்டா மாறுதல் (ஊரகம்)

கிராமப்புர நில ஆவணங்கள் ஏற்கனவே கணினிப்படுத்தப்பட்டு இணையவழிப் பயன்பாட்டிற்குக்

கொண்டு வரப்பட்டுள்ளன. ஜனவரி–2025 முதல் ஜூலை–2026 வரை 60 இலட்சத்து 68 ஆயிரம் இணையவழி ஊரகப் பட்டா மாறுதல் மனுக்கள் வரப்பெற்றதில் 47 இலட்சத்து 96 ஆயிரம் இணையவழி பட்டா மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன.

**ii. வேளாண் அடுக்குத் திட்டத்திற்காக புவி அமைவிடப் புள்ளிகள் பொருத்தப்பட்ட விவரங்கள்**

டிஜிட்டல் இந்தியா– நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் மொத்தமுள்ள 16,810 கிராம வரைபடங்களும் கணினிப்படுத்தப்பட்டு, அவற்றில் வேளாண் அடுக்குத் திட்டத்தின் புவி அமைவிடப்புள்ளிகள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், கணினிப்படுத்தப்பட்ட புலப்படங்கள், வேளாண் அடுக்குத் திட்டத்தின் கீழ் புவி அமைவிடப் புள்ளிகள் பொருத்தப்பட்ட கிராம வரைபடங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இதுவரை 48 இலட்சத்து 93 ஆயிரம் விவசாயிகளுக்கான அடையாள எண்களும், சுமார் 4 கோடியே 38 இலட்சம் வேளாண் நிலங்களுக்கான அடையாள எண்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**"கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்**
**உடையானாம் வேந்தர்க்கு ஒளி"**

**(திருக்குறள்: 390)**

கொடை, இரக்க குணம், நடுநிலை தவறாமல் ஆட்சி நடத்துதல், நலிந்த குடிமக்களைக் காத்தல் ஆகிய நான்கு பண்புகளை உடைய வேந்தன் வேந்தர்க்கு எல்லாம் ஒளி விளக்காவான் என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க, நல்லாட்சி செய்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வரலாற்றைப் புரட்டிப்போட்டு, வையத்தை வாய் பிளக்க வைத்து மூன்று மாதங்களில் எய்திய சாதனைகளை, நற்செயல்களைக் கண்டு, கேட்டு வியப்பவர்தான் அதிகம். சிதம்பர இரகசியமாய் என்றுமிருந்த சட்டசபைக் கூட்டம் இன்று சாமானிய மக்களும் விரும்பிப் பார்க்கும் செய்தி போலாகிவிட்டது.

இவை எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தாற்போல், தமிழ்நாட்டினை 2035-2036 ஆம் ஆண்டிற்குள் ஒன்றரை ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்ற உறுதி பூண்டு, அதற்கான தொலைநோக்குத் திட்டத்தினையும் வகுத்துத் தந்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர்.

**"சீர்வளரும் மறைவளரும் திறல்வேந்தர் முடிவளரும்**
**பேர் வளரும் வணிகருக்குப் பெருநிதியம் மிகவளரும்**
**ஏர்வளரும் திருவளரும் இசைவளரும் கடல் சூழ்ந்த**
**பார் வளரும் காராளர் பயிர் வளரும் திறத்தாலே"**

பெரும்புகழ் படைத்த உழவர்களின் பயிர் வளர்க்கின்ற தன்மையாலே சீர்வளரும்; சிறப்புப் பொருந்திய மறைநூல்கள் வளர்ச்சி பெறும்; வேந்தரின் மணிமகுடம் செழித்து ஓங்கும்; பெருமைமிக்க வணிகர்களுக்கு பெருஞ்செல்வம் மிகுதியாக உண்டாகும்; அழகுமிக்க கல்வி, கேள்வி முதலிய செல்வமும் செழித்து ஓங்கும் என்று கம்பர் பெருமான் ஏரெழுபது நூலில் கூறுவதிலிருந்து உழவுத்தொழில் சிறந்து விளங்கினால் அந்நாட்டில் பிற துறைகள் அனைத்தும் செழித்து வளரும் என்று அறியலாம்.

எனவேதான், ஒன்றரை ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார இலக்கினை நோக்கிய பயணத்தில் வேளாண்மை–உழவர் நலத்துறை அதிகபட்ச பங்களிப்பை வழங்குவதற்கேற்ப இத்துறையின் திட்டங்களும் செயல்பாடுகளும் அமையும்.

**கற்றது கையளவு!**

**கல்லாதது கடலளவு!**

நானும் உன்னதமான உழவுத்துறையை, உயிர்த்துறையை நன் முறையில் வழி நடத்திச்செல்ல, வேளாண்மையை மேம்படுத்த, உழவர்களின் நலன் காக்க, என்னென்ன தேவை என்பதை ஆர்வத்துடன் பயின்று வருகின்றேன்.

முதல் ஆண்டு என்பதால், தற்போதுள்ள நிதி ஆதாரங்களின் அடிப்படையில், விவசாயிகளின் உயர்விற்கான திட்டங்கள் முன்னுரிமையின்படி வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படவுள்ளன. இந்தத் திட்டங்கள் உழவர்களின்

வாழ்வினை மென்மேலும் முன்னேற்றிட வழிவகுக்கும் என்று உறுதியுடன் நம்புகிறேன். இனி வரும் ஆண்டுகளில் இன்னும் பலப்பலத் திட்டங்கள் தீட்டப்பட்டுப் பரவலான வேளாண் வளர்ச்சி எய்தப்படும் என்றும் இம்மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி கூறுவது போல நல்லதே நடக்கும்!

தொன்மை மிகுந்த, வளம் நிறைந்த தமிழ்நாட்டில் வேளாண்மை நிதிநிலை அறிக்கையினை உழவர்களின் நலனை உயர்த்திடும் நோக்கத்தில் பல்வேறு திட்டங்களுடன் உருவாக்கி இம்மாமன்றத்தில் சமர்ப்பித்திட எனக்கு உறுதுணையாக இருந்த **தலைமைச் செயலாளர் முனைவர் எம். சாய்குமார், இ.ஆ.ப.,** அவர்களுக்கும், **நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. எம்.ஏ.சித்திக், இ.ஆ.ப.,** அவர்களுக்கும் **வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் முனைவர் பொ.சங்கர், இ.ஆ.ப.,** அவர்களுக்கும் அனைத்துத் துறைத்தலைவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைக் தெரிவித்து கொண்டு விடைபெறுகிறேன்.

**வெற்றித் தமிழ்நாடு காண, வெல்லட்டும் வேளாண்மை!**

**நன்றி! வணக்கம்!**

## அட்டவணை

| வேளாண்மை மற்றும் சார்புத்துறைகளுக்கான 2026-27 ஆம் ஆண்டிற்கான மூலதனம் மற்றும் வருவாய் ஒதுக்கீடு (ரூபாய் ஆயிரத்தில்) | | | | |
|---|---|---|---|---|
| வ. எண் | துறை | RBE 2026-2027 | | |
| | | மூலதனம் | வருவாய் | மொத்தம் |
| 1 | வேளாண்மைத்துறை | 83,34,55 | 11,029,80,31 | 11,113,14,86 |
| 2 | தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை | 37,60,47 | 1,739,75,19 | 1,777,35,66 |
| 3 | வேளாண்மைப் பொறியியல் துறை | 18,22,37 | 605,11,00 | 623,33,37 |
| 4 | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை | 22,57,24 | 300,11,53 | 322,68,77 |
| 5 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் | 40,00,00 | 741,79,28 | 781,79,28 |
| 6 | விதைச்சான்று மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை | ... | 78,41,43 | 78,41,43 |
| 7 | சர்க்கரைத்துறை | ... | 261,74,00 | 261,74,00 |
| 8 | கால்நடை பராமரிப்புத்துறை | 166,00,65 | 1,416,56,60 | 1,582,57,25 |
| 9 | பால்வளத்துறை | 600,00,09 | 250,30,71 | 850,30,80 |
| 10 | மீன்வளம்-மீனவர் நலத்துறை | 736,14,02 | 799,86,03 | 1,536,00,05 |
| 11 | தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம் | 20,69,50 | 377,04,83 | 397,74,33 |
| 12 | தமிழ்நாடு மீன்வளப்பல்கலைக் கழகம், நாகப்பட்டினம் | 61,94 | 50,23,61 | 50,85,55 |
| 13 | கூட்டுறவுத்துறை (பயிர்க்கடன் போன்றவை) | ... | 701,49,25 | 701,49,25 |
| 14 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் | | 14,018,64,52 | 14,018,64,52 |

| வேளாண்மை மற்றும் சார்புத்துறைகளுக்கான 2026-27 ஆம் ஆண்டிற்கான மூலதனம் மற்றும் வருவாய் ஒதுக்கீடு (ரூபாய் ஆயிரத்தில்) | | | | |
|---|---|---|---|---|
| வ. எண் | துறை | RBE 2026-2027 | | |
| | | மூலதனம் | வருவாய் | மொத்தம் |
| | (நேரடி நெல் கொள்முதல் நிலையம்) | | | |
| 15 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை (தற்போது வளர்ச்சியடைந்த பாரதம் – கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டம் ஆக மறுசீரமைக்கப் பட்டுள்ள மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டம், ஊரக சாலைகள், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், அனைத்துக்கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்) | 2,137,78,01 | 15,965,24,82 | 18,103,02,83 |
| 16 | உணவு பதப்படுத்துதல் | ... | 183,79,47 | 183,79,47 |
| 17 | பட்டு வளர்ச்சித்துறை | ... | 102,98,71 | 102,98,71 |
| 18 | வனத்துறை (வேளாண் காடுகள், மனித–விலங்கு மோதல்) | 800,42,66 | 730,95,82 | 1531,38,48 |
| 19 | வருவாய்த்துறை (பயிர் சேதம், உழவர் பாதுகாப்புத்திட்டம் ) | ... | 331,17,26 | 331,17,26 |
| 20 | கால்வாய்கள் புனரமைத்தல் | 4,025,63,21 | | 4,025,63,21 |
| | **மொத்தம்** | **8,689,04,71** | **49,685,04,37** | **58,374,09,08** |